
thalagiri
ARTIST

# திருக்கோயில்

திங்கள் வெளியீடு

மாலை 1] விளம்பி தை - 1959 பிப்ரவரி [மணி 5


# ஆலயம்

ஆலயம் என்ற சொல் ஆ+லயம்—ஆன்மா லயிக்குமிடம் ஆன்மா ஒன்றுபட்டு ஒடுங்குமிடம் என்று பொருள்படும். கோயில் என்றால் கோ+இல் மன்னாதி மன்னனை இறைவன் உறைவிடம் என்று கொண்டாடுகிறோம். ஆதியில் மரங்களின் அடியிலேயே ஆலயங்கள் தோன்றின என்பது ஆராய்ச்சியாளர்கள் கண்ட உண்மை. 'ஆலமர் கடவுள்' 'ஆலமர் செல்வன்' என்று இறைவனை வழிபட்டனர். ஆல் ஐயன் இடம் ஆலயமென ஆயிற்று என்றும் சொல்லுவதுண்டு. பின்பு மரத்தைச் சுற்றி மதில்கள் எழுப்பிச் சிறு கோயில்கள் கட்டப் பெற்றன. இன்றும் பல சைவ, வைணவ ஆலயங்களில் தல விருஷங்கள் உள்ளன. பல தலங்கள் வனங்களென்றே போற்றப்படுகின்றன. தில்லைவனம் (சிதம்பரம்), கடம்பவனம் (மதுரை), செண்பக வனம் (திருநாகேச்சுரம்), முல்லைவனம், (கருகாவூர்) (திருமுல்லைவாயில்), வேணுவனம் (திருநெல்வேலி), பாரிஜாதவனம் (திருக்களர்), மதுவனம் (நன்னிலம்), மகிழவனம் (திருநீடூர்), வில்வவனம் (திருவாடானை) முதலிய பல தலங்கள் வனங்களாகவே புகழ்பெற்றுள்ளன. 108 திருப்பதிகளுள் ஒன்றான நைமிசாரண்யம் என்ற வனமாகவே வழங்குகின்றது.

புதைபொருள் ஆராய்ச்சி வல்லுநர்கள் சிந்து வெளியிலுள்ள மொகஞ்சதாரோ, ஹாரப்பா முதலிய இடங்களில் அகழ்ந்தெடுக்கப்பட்ட லிங்கங்கள் யோகாசனமூர்த்தி முதலிய உருவங்களும், எருது, புலி, மான், யானை முதலிய மிருகங்களின் உருவங்களமைந்த முத்திரை முதலியனவும் சிவ வழிபாட்டின் தொன்மையைக்காட்டும் வகையில் அமைந்திருக்கிறது. இடபம் சிவபெருமானுடைய ஊர்தி. மான் அவன் கையிலுள்ளது. புலித்தோலாடையும் கரியுரிபோர்வையும் அவனுக்குரியவை. இவ்வாராய்ச்சியின் பயனாகப் புராதன ஆலயங்கள் செங்கற்களால் கட்டப் பெற்றன எனத்தெரிகிறது. எழுத்துக்களை ஆராய்ந்த ஹீராஸ் என்னும் பாதிரியார் முக்கண்ணன், எண்குணத்தான் என்று இறைவன் உருவத்

தையும் கடவுட் தத்துவத்தையும் குறிக் கலாமென்று கூறுகிறுர்.

பாண்டியன் பல்யாகசாலை முது குடுமிப் பெருவழுதி என்பவன் பஃறுளி யாற்றுடன் குமரிக்கண்டம் கடல் கொள்ளப்படுவதற்கு முன்பு இருந்ததாகக் கருதப்படுகிருன். அவனைக் குறித்து புறநானூற்றில் ஒரு பாடலில் காரிகிழார் என்ற புலவர் 'நின்குடையே முனிவர் முக்கட்செல்வர் நகர்வலஞ் செயற்கே இறைஞ்சுக' என்று பாடியுள்ளார். அக் காலத்தில் கோயிலுக்கு நகர் என்றசொல் வழங்கப்பட்டுள்ளது. நாளடைவில் அச் சொல் கோயிலைச் சுற்றியுள்ள ஊர்ப் பெயராயிற்று. நாகரீகம் என்ற சொல் 'நகர்' என்பதிலிருந்து உண்டாயிற்று.

நக்கீரர் பாடிய திருமுருகாற்றுப் படையில் முருகனுடைய ஆறுபடை வீடு களும் விளக்கப் பெற்றுள்ளன.

சங்ககாலத்திலிருந்த சோழன் கரி காலன் காஞ்சீபுரம் ஏகாம்பரநாதர் கோயில் திருப்பணி செய்ததாகக் கூறப் படுகிறது. இன்றும் அவன் உருவம் அக் கோயில் முன் மண்டபத்தில் காணப்படு கிறது.

அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவரான கோச்செங்கட் சோழன் என் னும் அரசன் முன்வினைப் பயனுக யானை புக முடியாத மாடக்கோயில்கள் பல கட் டியதாக தேவாரத்திலும் திவ்யப் பிரபந் தத்திலும் கூறப்பட்டுள்ளது. 'எண்டோ ளீசர்க்கு எழில்மாடம் எழுபது செய்து' எனத் திருமங்கையாழ்வார் நாச்சியார் கோயில் பாசுரத்தில் பாடியுள்ளார்.

கி. பி. இரண்டாம் நூற்றுண்டிலக் கியமாகக் கருதப்படும் சிலப்பதிகாரத்தி லும் மணிமேகலையிலும் சிவபெருமான், முருகன், பலதேவன், திருமால் கோயில் களும், சூரியன், சந்திரன், ஐராவதம், சாத்தன், காமன் முதலியோர் கோட்டங் களும் இருந்ததாகச் சொல்லப்படுகிறது.

பிறவாயாக்கைப் பெரியோன் கோயிலும்
அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்
வால்வளைமேனி வாலியோன் கோயிலும்
நீலமேனி நெடியோன் கோயிலும்'

—சிலப்பதிகாரம்

'நுதல்விழி நாட்டத் திறையோன் முதலாப்
பதிவாழ் சதுக்கத்துத் தெய்வம் ஈருக'

—மணிமேகலை

சேரன் செங்குட்டுவன் வடநாட்டு யாத்திரை புறப்படும்போது வஞ்சியில் சிவன்கோயிலையும் ஆடக மாடத்தறிதுயி லமர்ந்த பெருமாள் கோயிலையும் வணங் கிச் சென்றுன். அவனே இமயத்திலிருந்து 'கல்' எடுத்து வந்து கண்ணகிக்குக் கோயில் கட்டினுன்.

திருவேங்கடம், திருவரங்கம், செந் தில், அழகர்கோயில், திருவேரகம் முதலிய கோயில்களைப்பற்றிய குறிப்புக்களும் சிலப்பதிகாரத்தில் காணப்படுகிறது. 'கொன்றையஞ் சடைமுடி மன்றப்பொதி யிலில் வெள்ளியம்பலத்து நள்ளிருட் கிடந்தேன்' என்று கூலவாணிகன் சாத்த ஞர் கூற்றுகச் சிலப்பதிகாரத்தில் மதுரை வெள்ளியம்பலத்தைப் பற்றிய குறிப்பு காணப்படுகிறது.

கி. பி. மூன்றும் நூற்றுண்டிலிருந்து 6-ம் நூற்றுண்டுவரை களப்பிரர் காலத் தில் கோயில்களைப்பற்றிய குறிப்புக்கள் விளக்கம் பெறவில்லை. பல்லவர் வச மிருந்த காஞ்சியிலும் களப்பிரர் ஆட்சியி லிருந்த சோழபாண்டிய நாடுகளிலும் சமணம் அருக மதங்கள் நிலவி வந்தன,

கோயில்கள் முதலில் மரம், செங்கல், செம்பு, பித்தளை முதலியவற்றைக் கொண்டு செய்யப்பட்டிருந்தமையால் இடைக்காலத்தில் சிதைவுற்றிருந்திருக்கலாம்.

கி. பி. 600 முதல் 900 வரை பல்லவர் காலத்தில் குகைக் கோயில்களும் கற்பாறைக் கோயில்களும் பின்னர் கற்றளிகளும் கற்கோயில்களும் கட்டப்பெற்றன. இக்காலமே நாயன்மார்களில் பலரும் ஆழ்வார்களும் அவதரித்த பொற்காலம். அப்பர் காலத்தவனான மகேந்திர வர்மன் (கி. பி. 610—640) திருச்சிராப்பள்ளி முதலிய கோயில்களைக் கட்டினான். இவன் பெயர் குணபரன் என்று திருச்சி கல்வெட்டில் காணப்படுகிறது. சமணனாக இருந்து அப்பரைத் துன்புறுத்திப் பின் அவரால் சைவனாக மாற்றப்பட்டு சமணப் பள்ளிகளை இடித்து 'குணபர ஈச்சுரம்' என்று திருவதிகைவீரட்டானத்துக்கு அண்மையில் சிவன் கோயில் கட்டிய வரலாறு யாவருமறிந்ததே.

நரசிம்மவர்மன் (I) (மாமல்லன்) (கி. பி. 640—670): மகாபலிபுரம் என வழங்கும் மாமல்லபுரத்தில் குகைக் கோயில்கள், கல் இரதங்கள், கற்பாறைகளால் ஆக்கிய கோயில்கள் முதலியன எடுத்து சிற்பக்கலையைப் பெரிதும் ஆதரித்தவன்.

பரமேஸ்வரவர்மன் (கி.பி. 670—685) சிறந்த சிவபக்தன். கற்களைப் பாறைகளினின்றும் உடைத்து ஒன்றின்மேல் ஒன்றாக அடுக்கிக் கற்றளிகள் கட்டியதாகத் தெரிகிறது. அவன் மகன் இராஜசிம்மன் (கி. பி. 685—720) காஞ்சியில் சரித்திரப் புகழ்பெற்ற கயிலாசநாதர் கோயிலைக் கட்டினான். மற்றும் மதங்கேசர் கோயில், ஐராவதேசர் கோயில் முதலிய சிவன் கோயில்களைக் காஞ்சியிலும் மகாபலிபுரத்தில் கடற்கரையிலிருக்கும் கோயிலையும் கட்டினான். கைலாசநாதர் கோயிலில் பல நடனச் சிற்பங்களைக் காணலாம்.

பல்லவமல்லன் (கி. பி. 725—790) திருமங்கை மன்னன் என்று வழங்கும் கடைசி ஆழ்வார் காலத்திலிருந்த சிறந்த வைணவ மதத்தினன். காஞ்சியிலுள்ள வைகுண்டப் பெருமாள் கோவிலைக் கட்டித் தன் இயற்பெயரால் பரமேஸ்வர விண்ணகரமென்று வழங்கினதாகத் தெரிகிறது. காஞ்சியில் திருக்குறிப்புத் தொண்டர் வழிபட்டு முத்தியடைந்த முத்தீசர் கோயிலைக் கட்டியவனும் இவனே. அக்காலத்தில் சைவமும் வைணவமும் பேதமின்றிப் போற்றப் பட்டுவந்தமைக்கு இது ஒரு சான்று.

நந்திவர்மன் II. (790—840) நந்திவர்மன் III, (840—865) காலத்திலும் கோயில் பணிகள் நடந்துவந்தன. கி. பி. 875 வரை கட்டப்பட்ட கோயில்களில் லிங்கத்துக்குப் பின்புறம் சோமாஸ்கந்தச் சிற்பம் செதுக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

கடைசி பல்லவனான அபராஜித பல்லவன் காலத்தில் (கி. பி. 875—883) கட்டப்பட்ட கோவில்களில் லிங்கங்களின் பின்புறம் சோமாஸ்கந்த உருவம் அமைக்கப்படவில்லை.

(கி. பி. 900—1300): பல்லவ ஆட்சியிலிருந்து தென்னாட்டை மீட்டு சோழப் பேரரசை ஏற்படுத்திய ஆதித்த சோழன் காலத்திலிருந்து சேக்கிழார் காலத்தில் இருந்த குலோத்துங்க சோழன் (II) ஆட்சி வரை திருக்கோயில்கள் பல கட்டப்பெற்றன. புகழ்பெற்ற பழைய திருக்கோயில்கள் கற்றளிகளாக அமைக்கப் பெற்று பூசைகளுக்கும் விழாக்களுக்கும் நிபந்தங்கள் விடப்பெற்றன.

இராஜ ராஜ சோழன் தஞ்சைப் பெரியகோயிலேயும் அவன் மகன் இராஜேந்திர சோழன் கங்கைகொண்ட சோழபுரம் முதலிய கோயில்களையும் கட்டினார்கள். இக்கோயில்களில் மூலத்தானத்தின் மேல் கட்டப்பட்டுள்ள விமானங்களே கோபுரங்கள் போன்று உயர்ந்துள்ளன. பிற்காலச் சோழ மன்னர்கள் கட்டிய கோவில்களின் விமானங்கள் சிறிய அளவிலும் முன் கோபுரங்கள் உயரமாகவும் கட்டப்பட்டுள்ளன.

பாண்டிய மன்னரும் பலகோயில்களைக் கட்டினர். தென்காசிக் கோயிலைக் கட்டிய பராக்கிரம பாண்டியன் பிற்காலத்தில் அக்கோயில் திருப்பணி செய்வோருக்கு முன்கூட்டியே திக்குநோக்கித் தெண்டனிட்டுத் தன் நன்றியையும் தனக்கு ஆலயத் திருப்பணியில் உள்ள ஆர்வத்தையும் கவலையையும் நன்கு புலப்படுத்தியுள்ளான்.

கி. பி. 1300—1700 விஜயநகர் மன்னர் காலத்திலும் நாயக்கர்கள் காலத்திலும் பலகோயில்களில் திருப்பணிகள் செய்யப் பெற்றும் மதில்கள் கோபுரங்கள், மண்டபங்கள் சிற்பங்கள் ஓவியங்கள் முதலியன அமைக்கப் பெற்றும் விரிவடைந்தன. அம்பிகைக்கும் கணபதி துர்க்கை முதலியோருக்கும் அடியார்களுக்கும் நாளடைவில் கோயில்களில் இடங்கள் அமைந்தன.

மேற்கூறிய சுருக்கமான வரலாற்றினின்றும் ஆலய அமைப்பின் வளர்ச்சியை ஒருவாறு ஊகிக்கலாம்.

1. மரங்களின் அடியில் அமைக்கப் பெற்ற ஆலயங்கள் — தல விருக்ஷங்கள், வனங்கள்.
2. சங்க இலக்கியங்கள், சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய இலக்கியங்களில் கூறப்பட்ட கோயில்கள். புதைபொருள் ஆராய்ச்சியின் மூலம் தெரிந்த அளவில் புராதனக் கோயில்கள் மரம் செங்கல் உலோகம் முதலிய அழியும் பொருட்களால் ஆனவை.
3. குகைக் கோயில்கள், குடை கோயில்கள்.
4. பாறைகளிலிருந்து வெட்டிய கல் இரதக்கோயில்கள்.
5. கற்களால் அமைக்கப் பெற்ற கற்றளிகள் (சோமாஸ்கந்த உருவங்கள் பின்புறம் உள்ளவை).
6. கற்களாலும் சுண்ணும்பு மரம் உலோகங்களாலும் ஆக்கப் பெற்ற கற்கோயில்கள்.
7. மூலஸ்தானத்தின்மேல் விமானங்களே கோபுரங்கள் போன்று உயர்ந்துள்ளவை.
8. கோயில் வாயிலில் உயர்ந்த கோபுரங்களுள்ளவை.
9. அம்பிகைக்குக் கோயில்கள் (திருக்காமக்கோட்டத்து நாச்சியார் கோயில்—காஞ்சி காமாட்சி கோயில்) கணபதி, துர்க்கை முதலியோருக்குப் பிற்காலத்தில் கோயில்கள் கட்டப்பட்டதாகத் தெரிகிறது.
10. அடியார்களுக்குக் கோயில்கள்.
11. பிரகாரங்கள், தீர்த்தங்கள், மண்டபங்கள் நாளடைவில் கட்டப் பெற்று இப்போது நாம் காணும் கோயில்கள் அமைந்துள்ளன.

ஆகமவிதிகளின்படி கோயிலமைப்புகளைப் பற்றியும் உள்ள நுட்பங்களையும் மாறுதல்களையும் பற்றியும் தனியாக ஆராய்தல் வேண்டும்.

**அ. உத்தண்டராமன்**
**2—2—59**

# சைவம்

திரு K. வச்சிரவேலு முதலியார், B.A., L.T.

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

**தேவாரத் தோற்றம் ;**

தமிழ் இலக்கிய வரலாற்றில், கி. பி. மூன்றும் நூற்றுண்டு முதல் கி. பி. ஏழாம் நூற்றுண்டின் முதற்பகுதி வரை உள்ள காலம் இருண்டகாலமாகும். அக்காலத்தில் தமிழக வரலாறு தெளிவு படுமாறு இல்லை. அரசியல் ஆட்சி தமிழர் அல்லாத களப்பிரர் என்னும் ஒருவகையாரிடத்து இருந்தது. மக்களது உணர்வு நிலை ஆட்சி, வடக்கே தோன்றிப் பின் தெற்கே பரவி வந்த புத்தம், சமணம் என்னும் மதங்களைச் சார்ந்த துறவிகள் வயப்பட்டிருந்தது. அக்காலத்தில் இருந்த அத் துறவிகள் செல்வாக்கை இஞ்ஞான்று இலங்கையிலும் பர்மாவிலும் உள்ள புத்த பிக்ஷுக்களின் செல்வாக்குக்கு ஒப்பிடலாம். அதனுல், தமிழ்மொழி, நாகரிகம், பண்பாடு, கலை, மெய்ந்நெறி என்பவை விளக்கமும் வளர்ச்சியும் இன்றிப் பேரிடர் எய்தின.

இந்நிலையில், தமிழ் நன் மக்களது சமய வாழ்வு, சமுதாய வாழ்வு, இலக்கியம் என்பவற்றில் பெரியதொரு சீர்திருத்தத்தையும், விழிப்பையும், மறுமலர்ச்சியையும், உண்டு பண்ணிய பெருமக்களே **திருநாவுக்கரசர்,** **திருஞான சம்பந்தர்** என்னும் அருட் பேராசிரியர் இருவரும் ஆவர்.

இவ்வாசிரியர்கள் திருவருள் உண்மையை மக்கள் தெளியுமாறு உணர்த்தினர்; திருக்கோயில் வழிபாட்டை வலியுறுத்தினர்; தமது அருள்வாழ்க்கையாலும், கடவுள் அனுபவம் பொதிந்த, அதியற்புத சின்மயப் பாடல்களாலும் திருநெறி எனப்படும் சிவநெறியைத் தமிழ் மக்கள் அனைவரும் பின்பற்றி ஒழுகுமாறு செய்தனர். சமண சமயம் சார்ந்து அதனை வளர்த்து வந்த பல்லவப் பேரரசனுகிய மகேந்திர வர்மன் திருநாவுக்கரசராலும், கூன்பாண்டியன் என்னும் பாண்டிய மன்னன் திருஞான சம்பந்தராலும் சைவர் ஆயினர். இவர்கள் காலம் ஏழாம் நூற்றுண்டின் பிற்பகுதி ஆகும்.

இவ்வருட் பேராசிரியர்கள் அருளிச் செய்த திருப்பதிகங்கள் உயர் ஞானத்தையும் கடவுள் மெய்யன்பையும் ஒருங்கே அளிப்பவை. அவற்றை அவ்வாசிரியர்கள் திருவருள் ஆணையாற்றுல் மூல இலக்கியங்களாகவும், கைகண்ட மந்திரங்களாகவும் மக்களுக்கு உதவி, அவற்றைப் பின்பற்றி ஒழுகுமாறு பணித்துள்ளார்கள். ஆதலின், அவை அவர்கள் காலம் முதலாகவே **தமிழ்மறை** எனவும், **திருநெறித் தமிழ்** எனவும் வழங்கப் பெற்று வருகின்றன.

இவ்விரு பேராசிரியர்களுக்குப் பின், ஒன்பதாம் நூற்றுண்டில் தோன்றியவர் சுந்தரமூர்த்தி நாயஞர் எனப்படும் நம்பி ஆரூரர். இவர் இறைவனுல் தடுத்தாட் கொள்ளப் பெற்று, மேலே கூறிய இரண்டு ஆசிரியர்கள் போலவே, திருவருள் நெறிநின்று சிவத்தலங்கள் தோறும் சென்று இன்னிசைத் திருப்பதிகங்கள் பாடியருளினர். பெரிய புராணத்திற்கு மூலமாகிய திருத்தொண்டத் தொகை எனப்படும் திருப்பதிகம் இவர் அருளிச் செய்ததே ஆகும்.

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், நம்பி ஆரூரர் என்னும் இம் மூவர்களும் அருளிச் செய்த திருப்பதிகங்கள் **தேவாரம்** எனவும், **மூவர் தமிழ்** எனவும் வழங்கப்படும்.

இம் மூவர்களோடும் மாணிக்க வாசகரையும் சேர்த்து நால்வர் எனவும், சமய குரவர் எனவும், சைவ சமயாசிரியர் எனவும் வழங்குவது மரபு.

இந் நால்வர்களால் அருளிச் செய்யப் பெற்ற தேவார திருவாசகங்கள் தமிழ் மறைகள் எனப்படும். யாழ்ப்பாணம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் இவை "வேதத்தின் ஞான காண்டப் பொருளைச் சிவாகமத்துக்கு மாறுபடா வண்ணம் உள்ளபடி அறிவிக்கும் தமிழ் வேதம்" எனத் தமது சைவ வினாவிடையில் எழுதியுள்ளார்கள்.

## திருமுறை வகுப்பு:

திருமூலர் அருளிச் செய்த தமிழ் மூவாயிரம் எனப்படும் திருமந்திரமாலை தேவார காலத்துக்கு முற்பட்டது. காரைக்கால் அம்மையார், கோச் செங்கட் சோழர், கண்ணப்பர், சண்டேசர் என்னும் உண்மை நாயன்மார் களும் தேவார காலத்துக்கு முற்பட்டவர்கள் ஆவர்.

நம்பி ஆரூரர் காலத்து இருந்தவர் கழறிற்றறிவார் என்னும் சேரமான் பெருமாள் நாயனார்.

நம்பிஆரூரர் காலத்துக்குப் பின் 10-ஆம் நூற்றாண்டின் இறுதியில் இருந்தவர் நம்பி ஆண்டார் நம்பிகள். இவர் இராசராச சோழன் வேண்டுகோளின்படி தேவாரத் திருமுறை ஏடுகளைத் தில்லையில் கண்டெடுத்து, அவற்றை ஏழு திருமுறைகளாகப் பின்னால் கூறியுள்ளவாறு வகுத்தருளினார். பின், அவ்வத் திருப்பதிகத்துக்கு உரிய பண்வகை, கட்டளை வகைகளை ஆராய்ந்து கண்டு குறித்தருளினார். மேலும், திருத்தொண்டத் தொகையில் பாடப்பெற்ற நாயன்மார்களின் வரலாறுகளை, தேவாரம், பிற நூல்கள், வேறு வரலாற்று மூலங்கள் என்பவற்றை ஆராய்ந்து, குற்றமறத் தெளிந்தார்; தெளிந்து, திருத்தொண்டத் தொகையின் பொருணிலையைப் பிற்காலத்தோர் விரித்து உணர்ந்து கொள்ளுதற்குத் துணையாகும்படி திருத்தொண்டர் திருவந்தாதி என்னும் பிரபந்தத்தையும் மேலும், ஒன்பது பிரபந்தங்களையும் செய்தருளினார்.

இவர் முதல் இராசேந்திர சோழன் ஆட்சிக்காலத்தும் இருந்தவராகலின், தேவாரங்களோடு ஒத்த திருவருட் பெருமையுள்ள திருவாசகம் முதலிய பிற பாடல்களையும் பிரபந்தங்களையும் ஆராய்ந்து, தேவாரங்களுக்குப் பின் எட்டு, ஒன்பது, பத்து, பதினொன்று ஆம் திருமுறைகள் எனப் பின்வருமாறு வகுத்தருளி, அவையெல்லாவற்றையும் செப்பேட்டுச் சாசனம் செய்வித் தருளினார்.

## திருமுறைகளின் அமைப்பு :

1. திருஞானசம்பந்தர் அருளிச் செய்த திருப்பதிகங்கள் 1, 2, 3-ஆம் திருமுறைகள்.

2. திருநாவுக்கரசர் அருளிச் செய்த பண்வகை, திருநேரிசை, திருவிருத்தம், என்பவை 4-ஆம் திருமுறை; அவர் அருளிச் செய்த திருக்குறுந்தொகைத் திருப்பதிகங்கள் 5-ஆம் திருமுறை; அவர் அருளிச் செய்த திருத்தாண்டகங்கள் 6-ஆம் திருமுறை.

3. நம்பி ஆரூரர் அருளிச் செய்த திருப்பதிகங்கள் 7-ஆம் திருமுறை.

இவை ஏழும் சேர்ந்து அடங்கன் முறை எனவும் திருநெறித் தமிழ் எனவும் வழங்கும்.

4. இனி, திருவாதவூர் அடிகள் அருளிச் செய்த திருவாசகமும் திருக்கோவையாரும் 8-ஆம் திருமுறை.

5. திருமாளிகைத் தேவர் முதலிய ஒன்பதின்மர் அருளிச் செய்த திருவிசைப்பா, திருப்பல்லாண்டு என்பவை 9-ஆம் திருமுறை.

6. திருமூலர் அருளிச் செய்த திருமந்திரம் மூவாயிரம் 10-ஆம் திருமுறை.

7. திருவாலவாயுடையார் (சிவபெருமான்) காரைக்காலம்மையார் (பேயார் எனவும் படுவர்), ஐயடிகள் காடவர்கோன்நாயனார், சேரமான் பெருமாள் நாயனார், நக்கீர தேவர், கல்லாடதேவர், கபிலதேவர், பரணதேவர், இளம்பெருமாள் அடிகள், அதிராவடிகள், பட்டினத்துப் பிள்ளையார், நம்பியாண்டார் நம்பிகள் என்னும் பன்னிருவர் ஆசிரியர் அருளிச் செய்த நாற்பது பிரபந்தங்கள் 11-ஆம் திருமுறை.

## திருத்தொண்டர் புராணம்

பன்னிரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில், மகாகவியும் சிவானுபூதிச் செல்வரும் ஆகிய சேக்கிழார் பெருமான் அநபாய சோழன் வேண்டுகோளின்படி, திருவருள்

வழிநின்று பாடியருளியது பெரிய புராணம் என வழங்கும் திருத்தொண்டர் புராணம். திருத்தொண்டத் தொகையின் மாபாடியம் போன்று நின்று நிலவுவது. பொதுவாகப் புராணம் என்பவை யெல்லாம் புனைந்துரை எனக்கொள்ளப்படும்: ஆனால், இது, கி.பி. 3-ஆம் நூற்றாண்டு முதல் கி. பி. 9-ஆம் நூற்றாண்டுவரை உள்ள கால எல்லையில், தமிழ் நாட்டின் சமயம், நாகரிகம், பண்பாடு, கலை முதலியவற்றை வரலாற்று முறையில் கற்றுணர வழி செய்யும் வரலாற்று மூலமாக (Source of History)க் கொள்ளப்படும் தனிச் சிறப்பை உடையது.

திருமுறைகளின் வரலாற்றையும், அவற்றின் ஆசிரியர்களின் வரலாறு உளநிலை என்பவற்றையும், அவற்றின் பொருணிலையையும் உள்ளவாறு உணர்வதற்கு இப்புராணம் இன்றியமையாதது. இது "தோடுடைய செவியன்" என்னும் திருநெறிய தமிழோடு ஒத்த அருட்பெருமாண்புடையது எனக் கண்டு, சிவானுபூதிச் செல்வர்கள் இதனை ஏனைய பதினொரு திருமுறைகளோடு சேர்த்துப் பன்னிரண்டாம் திருமுறையாக வகுத்துத் திருமுறைகளின் எண்ணிக்கையை முற்றுவித்தனர்.

இதனால், புறவிருள் நீக்கிப் பொருள்களைக் காட்டும் ஞாயிறு பன்னிருவகைப்பட்டாற்போல, அகவிருள் நீக்கி மெய்ப்பொருளைத் தெளிவிக்கும் திருமுறைகளும் பன்னிரண்டு வகைப்பட்டன.

இப்பன்னிரு திருமுறைகளே சிவநெறிக்குத் தலையாய பிரமாண நூல்களாய இலக்கியங்கள் ஆகும்.

(தொடரும்)



## ஸ்ரீ மங்களாம்பிகை சமேத ஸ்ரீ ஆதி கும்பேஸ்வர ஸ்வாமி கோயில் ஜீர்ணோத்தாரண கும்பாபிஷேக

## அறிக்கை

சோழ நாட்டில் தேவாரப் பாடல்பெற்ற தலமான திருக்குடமூக்கு என்னும் கும்பகோணத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ மங்களாம்பிகை சமேத ஆதி கும்பேஸ்வரர் கோயிலின் ராஜகோபுரத்தின் கீழுள்ள நடவானம், பெரிய பிராகாரம், இவைகளுக்கு செங்கல் தளவரிசை போட்டும் கோபுரங்கள் விமானங்கள், நந்தவன மதில்கள் பசுமடம் முதலியவற்றைப் பழுது பார்த்தும், அஷ்டபந்தனம் சாத்தி மஹாகும்பாபிஷேகம் முதலிய திருப்பணிகள் செய்யவும் ஒரு லக்ஷ ரூபாய் செலவாகுமென திட்டமிடப்பட்டு வேலைகளும் நடைபெற்று வருகின்றன. விளம்பி தை-30-ந்தேதி (12—2—59) வியாழக்கிழமை கும்பாபிஷேகம் நடைபெறும். இச்சிவத் திருப்பணிக்கு எல்லோரும் ஒத்துழைத்து அவரவர் சக்திக்கு தகுந்த பொருளை உதவி செய்து திருப்பணியைப் பூர்த்தி செய்து வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

S. வெங்கடாசலம்
நிர்வாக அதிகாரி
ஸ்ரீ கும்பேஸ்வரஸ்வாமி தேவஸ்தானம்

V. S. T. திருமலைவேலு பிள்ளை
S. இராமகிருஷ்ண அய்யர்
G. K. சுந்தரம் பிள்ளை
தர்மகர்த்தக் குழுவினர்.



# திருவாரூர்

வேம்பினைப் பேசிவிடக்கினை
ஓம்பி வினைபெருக்கித்
தூம்பினைத் தூர்த்தங்கோர்
சுற்றந் துணையென் றிருத்திர்தொண்டீர்

ஆம்பலம் பூம்பொய்கை
ஆரூர்அமர்ந்தான் அடிநிழற்கீழ்
சாம்பலைப் பூசிச்சலமின்றித்
தொண்டுபட் டுய்மின்களே

—திருநாவுக்கரசர்

வல்லியந் தோலுடையான்
　　வளர்திங்கட் கண்ணியினன் வாய்த்த
நல்லியல் நான்முகத்தோன்
　　தலையின் அறவேற்றன்
அல்லியங் கோதைதன்னை
　　யாகத்தமர்ந்தருளி ஆரூர்ப்
புல்லிய புண்ணியனைத்
　　தொழுவாரும் புண்ணியரே

—திருஞானசம்பந்தர்


பொன்னு மெய்ப்பொருளுந் தருவானைப்
　　போகமுந் திருவும் புணர்ப்பானைப்
பின்னையென் பிழையைப் பொறுப்பானைப்
　　பிழையெலாந் தவிரப் பணிப்பானை
இன்னதன்மைய னென்றறி யொண்ணு
　　எம்மானை எளிவந்த பிரானை
அன்னம்வைகும் வயற் பழனத்தணி
　　ஆரூரானை மறக்கலு மாமே.

—சுந்தரர்

'திருவாரூர்ப் பிறக்க முத்தி', 'திருவாரூர்த் தேர் அழகு'' என்பவை நாடறிந்த பழமொழிகள். இத்தகைய திருவாரூர் சோழ நாட்டிலுள்ள பாடல் பெற்ற சிவத்தலங்களில் ஒன்று: பண்டைய வரலாற்றுப் புகழும் சமயப் பெருமையும் ஒருங்கே கொண்டு திகழ்வது. இத்தலத்தைப்பற்றிப் பாடியோர் பலர்; இங்குள்ள இறைவனை வழிபட்டுப்பேறு பேற்றோர் பலர்; இவ்வூரில் தோன்றிப் புகழ்பெற்ற ஆன்றோர் மிகப் பலர். இப்பதி, தொன்மைப் பெருமை வாய்ந்ததென்பதற்குப் பண்டை இலக்கியச் சான்றுகள் பல உள்ளன. ''ஒருவனுய் உலகேத்த நின்ற நாளோ...மாதோர் பாகம் திருவினுள் சேர்வதற்கு முன்னே பின்னே திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே'' என்றும், ''வேதத்தை விரிப்பதற்கு முன்னே பின்னே விழா ஆரூர்க் கோயிலாக் கொண்ட நாளே'' என்றும் அப்பர் பெருமான் இத்தலத்தின் பழமையை அறிவிக்கிறார். இத்தலம், பிறக்க முத்திதரும் பெற்றியுடையது; விராட்புருடனுக்கு மூலாதாரத் தலமாக இருப்பது; பஞ்ச பூதப் பதிகளில் பிருதிவித்தலமாக விளங்குவது. சோழ மன்னர்கள் சிலகாலம் இதைத் தலைநகராகக் கொண்டிருந்தனர். இதையவர்கள் முடிசூட்டிக் கொள்ளும் நகராகவும் வைத்திருந்தனர். இங்கு அம்பிகை தவஞ் செய்தாள்; திருமகள் வழிபட்டாள்; ஏழு விடங்கத்தலங்களின் முதல் விடங்கப் பதியாக வீதி விடங்கராகிய தியாகேசர் எழுந்தருளியுள்ளனர். கன்றிழந்த பசு ஒன்றின் குறை தீர்ப்பதற்காகத் தன் மைந்தன்மேல் தேரைச்செலுத்தி இறைவன் திருவருளை வெளிப்படுத்திய மனுநீதிச் சோழன் அரசாண்ட இடம். சுந்தரர், தொண்டர் நாதன் 'பாதம் சிவக்கப் பசுந்தமிழ் வேண்டிப் பரவை தன்பால் தூதன்று' அனுப்பியதுமிங்குதான். சுந்தரர் திருத்தொண்டத்தொகை பாடியதும் இப்பதிக் கண்ணேயே. அவர் இழந்த ஒரு கண்ணொளி பெற்றதும் இத்திருவூரில்தான். அவருக்கு குண்டையூர்க்கிழார் அளித்த நெல் திருவாரூர் தெருக்களில் பூதங்கள் கொண்டுவந்து பரப்பிய அற்புதம் நிகழ்ந்த இடம். கழற்சிங்கர், செருத்துணையார், சேரமாசிமாறர், தண்டியடிகள், திருநீலகண்ட யாழ்ப்பாணர், நமிநந்தியடிகள், விறன்மிண்டர், ஏயர்கோன் கலிக்காமர் முதலிய நாயன்மார்கள் வழிபட்டுப் பேறுபெற்றதும் இத்திரு நகரிலேதான். தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, பெரிய புராணம் முதலிய திருமுறைகளிலும், இன்னும் பல நூல்களிலும் இத்தலத்தின் பெரும்புகழ் பேசப் பெற்றிருக்கிறது. இப்பதியைப்பற்றி எழுந்த தனிப் பாடல்கள் பலப்பல. தேவாரத்தில் ஏழு திருமுறைகளிலும் இப்பதிக்கே அதிகமான பாடல்கள் உண்டென்றால் இதன் பெருமையைச் சொல்லவும் வேண்டுமோ!

அதிராஜராஜ வளநாடு, க்ஷத்திரிய சிகாமணி வளநாடு, ஜயமாணிக்க வளநாடு இவைகளிலுள்ள திருவாரூர்க் கூற்றத்திலுள்ள திருவாரூர் என்று கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன. திரு + ஆர் + ஊர் என்பது செல்வம், அழகு, அருமை மிக்க ஊர் என்று பொருள்படும். புராணங்களில் இத்தலத்திற்கு கமலாலயம், ஸ்ரீபுரம், வீதி விடங்கம், ஆடகேசுவரம், கலிசெலா நகரம், சக்திபுரம், சமற்காரபுரம், தேவயாகபுரம், தேவாசிரயம், முசுகுந்தபுரம், மூலாதார நகரம் முதலிய பல பெயர்கள் கூறப்பட்டிருக்கின்றன.

இத்திருக்கோயில் தென்னிந்தியாவிலுள்ள மிகப் பெரிய கோயில்களில் ஒன்று. ஐந்து வேலிநிலப் பரப்பில் அமைந்துள்ள



கல்தேர்

தாக, "கோயில் ஐந்து வேலி, குளம் ஐந்து வேலி, ஓடை ஐந்து வேலி" என்று ஒரு பழமொழி வழங்குகின்றது. இக்கோயிலில் மூன்று பிரகாரங்கள் உள்ளன; ஏழு கோபுரங்கள் உள்ளன. கி. பி. 10-ஆம் நூற்றாண்டில் சோழ நாட்டை ஆண்ட இராஜராஜ சோழன் திருவாரூர்க் கோயில் அமைப்பைப் பார்த்தே தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டினன் என்ற ஒரு செய்தியுண்டு.

ஆதலின் திருவாரூர்க் கோயில் அதற்கு முன்னே கட்டப்பட்டிருத்தல் வேண்டும். கோயில் கிழக்கு நோக்கியுள்ளது. கீழ்க்கோபுர வாயிலின் உள்ளே நுழைந்ததும் பிரம்ம நந்தி யிருக்கிறது. மழை வறண்ட காலத்தில் இவரைச்சுற்றி நீர் நிரப்பி வைத்தால் மழை பெய்யும் என்ற ஒரு வழக்கு உண்டு. முதல் வெளிப் பிரகாரத்தை வலம்வரும் போது மேற்குப் பிரகாரத்தில் சித்திரசபை மண்டபம் அல்லது சபாபதி மண்டபம் என்ற பெரிய மண்டபம் இருக்கிறது. இதில் அழகிய வண்ண ஓவியங்கள் தீட்டப்பெற்றிருப்பது கண்டு களிக்கத்தக்கது. பங்குனி உத்திர விழாவில் தேர் உத்திர பாதத்துக்குள் நிலைக்கு வந்துவிட்டால் தியாகராஜ சுவாமி இம்மண்டபத்திற்கு எழுந்தருளி உத்திரதீர்த்தம் கொடுத்தருளுவர்.

இம்மண்டபத்திற்கப்பால் வட மேற்கு மூலையில் கமலாம்பிகையின் தனித் திருக்கோயில் இருக்கிறது. இது பராசக்தி பீடங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. அம்பிகை சந்நிதி சிறிது ஈசானிய பார்வையாக இருக்கிறது. அம்பாள் யோகாசனத்தில் தவத் திருக்கோலமாக அமர்ந்து இருப்பது கண்கொள்ளாக் காட்சியாகும். அம்மை கோயி

லின் தெற்குப் பிரகாரத்தின் மேற்கு மூலையில் **அட்சரபீடம்** இருக்கிறது. அதில் ஒரு பீடமும், ஐம்பத்தொரு அட்சரங்கள் பொறிக்கப் பெற்ற திருவாசியுமே உள்ளன. வடக்குப் பிரகாரத்தில் **ஒட்டுத் தியாகர்** சந்நிதி இருக்கிறது. விறன் மிண்ட நாயனர் சுந்தரமூர்த்தி சுவாமிகளைக் கோயிலுக்குள் போகாமல் தடுக்கவும் மனம் நொந்த சுந்தரர்க்கு தியாகப்பெருமான் இவ்விடத்தில் காட்சியளித்தாகச் சொல்லப்படுகிறது. இந்தப் பிரகாரத்தில் தல விருட்சமான **பாதிரிமரமும்** இருக்கிறது.

வெளிப் பிரகாரத்தின் வட கிழக்கு மூலையில் காணப்படுவது **தேவாசிரிய மண்டபமான** ஆயிரக்கால் மண்டபம். 'திருவார் பெருமை திகழ்கின்ற தேவாசிரியம்' என்றும், இம்மண்டபத்தில் 'விண்ணவர் ஒழிய மண்மேல் மிக்க சீரடியார் கூடி எண்ணிலார் இருந்தனர்' என்றும் சேக்கிழார் பெரிய புராணத்தில் விதந்தோதப்பட்டிருக்கிறது. இம்மண்டபத்தை இராஜதானி மண்டபம் என்றும் வழங்குவர். ஆழித்தேர் விழா முடிந்ததும் தியாகராஜ சுவாமி இம்மண்டபத்திற்கு எழுந்தருளி மகாபிஷேகம் கொள்ளுவர்.

இரண்டாவது பிரகாரத்துள் நுழைந்ததும் இராஜ நாராயண மண்டபம் என்ற அழகிய மண்டபம் இருக்கிறது. இதில் தியாகப் பெருமான், பங்குனி உத்திரம், திருவாதிரை இந்த திருநாட்களில் எழுந்தருளுவார். இந்த இரண்டாம தெற்குப் பிரகாரத்தில் **திருவாரூர் அரநெறி** என்ற தனிப் பாடல்பெற்ற சந்நிதி இருக்கிறது. இப்பதியை அப்பர் இரண்டு பதிகங்களால் பாடியுள்ளார். இறைவன் திருநாமங்கள், அரநெறியப்பர், அசலேசுவரர், அகிலேசுவரர் என்பன. அரநெறியாழ்வார் என்று கல்வெட்டு கூறுகிறது. அம்பிகையின் பெயர் வண்டார்குழலி என்பது. இதைக் கற்கோயிலாக, கண்டராதித்த சோழர் மனைவி செம்பியன் மாதேவியார் கட்டினர். இங்குதான் **நமிநந்தியடிகள் நாயனர்** திருவிளக்குக்கு எண்ணெய் இல்லாமல் தேவதீர்த்த நீரை விட்டு விளக்கெரியச் செய்து தொண்டு செய்தார், "ஆரூர் நறுமலர்நாதன் அடித்தொண்டன் நம்பி நந்தி நீரால் திருவிளக்கிட்டமை நீணுடறியுமன்றே' என்றும், 'நந்திபணி கொண்டருளும் நம்பன்' என்றும் திருநாவுக்கரசர் புகழ்ந்திருக்கிறர். 'நாதர் அருளால் திருவிளக்கு நீரால் எரித்தார் நாடறிய' என்பது சேக்கிழார் வாக்கு. மற்றும், **செருத்துணை நாயனர்** இங்கு திருமாலைத் தொண்டு செய்து வந்தார். பல்லவவேந்தர் கழற்சிங்கர் தன் தேவியுடன் வலம்வரும்போது, தேவியார் பூமண்டபத்துச் சிந்திக்கிடந்த பூவை எடுத்து மோந்தார். அது கண்ட செருத்துணையார் அப்படி மோந்த மூக்கை அரிந்தார். அந்த தண்டனையும் போதாதென்று அவர் கணவரான கழற்சிங்கர் அவ்வம்மையாரின் கையையும் வெட்டினர். இவ்விருவருக்கும் இறைவன் திருவருள் பாலித்தார். இந்தப் பிரகாரத்திலேயே **ஆடகேசுவரர்** சந்நிதி இருக்கிறது. சிவலிங்கப் பெருமான் அம்மையாருடன் காட்சியளிக்கிருர். மேற்கு இரண்டாம் பிரகாரத்தில் **ஆனந்தேசுவரர்** கோயிலுண்டு. இதைப்பற்றி **திருவாரூர் உலா** என்ற நூலில் குறிப்பு வருகிறது. வடக்கு இரண்டாம் பிரகாரத்தில் **விசுவகர்மேசுவரம்** என்ற அழகிய சிற்பகற்பணிக் கோயிலுண்டு. இப்பிரகாரத்திலிருந்து ஏழு கோபுரங்களையும் தெரிசிக்கலாம். இன்னும் பல லிங்கங்கள் கோயிலினுள் இருக்கின்றன.

இரண்டாம் பிரகாரத்திலிருந்து உட்பிரகாரஞ் செல்லும்போது நேரில் **வன்மீகநாதர் சந்நிதி.** அதற்கு அழகியான் கோபுரம் என்பதன் வாயிலைக் கடந்து செல்ல வேண்டும். இறைவனுக்குப் புற்றிடங் கொண்டார், திருமூலட்டான நாதர் என்ற திருப்பெயர்களும் உண்டு. தேவாரத்தில் இப்பகுதியை **திருமூலட்டானம்** என்றும், **பூங்கோயில்** என்றும் பேசப் பெறுகிறது. 'தேங்காவி நாறுந் திருவாரூர்த் தொன்னகரில் பூங்கோயில்' எனபது அப்பர் கூற்று. கல்வெட்டுக்களிலும் திருமூலட்டானம் என்று காணப்படுகிறது. இந்த சந்நிதி வலப்பக்கத்து அர்த்த மண்டபத்தில் **சோமகுலாம்பிகை,** பிரியாவிடை யம்மையாக எழுந்தருளியிருக்கிருர்.

வன்மீகநாதர் சந்நிதிக்குத் தெற்கிலுள்ளது **தியாகராஜசுவாமி** சந்நிதி; இத்தலத்திற்கே மிக்க சிறப்பைத் தருவது. இது மிகவும் பிரபலமானது. தியாகராஜ சுவாமிக்கு அசைந்தாடிய பெருமான், அடிக்காயிரம் பொன் அளிப்பவர், அந்தியும் சந்தியும் ஆடுவார், அருமைப் பெருமாள், இரத்தின சிங்காதனுதிபதி, இருந்தாடழகர், கம்பிக் காதழகர்,


கருணாகரத் தொண்டைமான், கனகத் தியா கேசர், கிண்கிணிக்காலழகர், செங்கழுநீர்த் தார்மர், செம்பொற்சிங்காதனாதிபதி, செவ் வந்தித் தோட்டழகர், தியாக சிந்தாமணி, தியாகப் பெருமாள், திருவந்திக் காப்பழகர், வள்ளல், வீதிவிடங்கப் பெருமான் என்ற பல திருநாமங்களால் நூல்கள் புகழ்ந்து பேசு கின்றன. முசுகுந்தன் என்ற சோழச் சக்கர வர்த்தி சப்த விடங்க க்ஷேத்திரங்களில் முத லாவதாக இதை ஸ்தாபித்ததாகச் சொல்லப் படுகிறது. 'பவனி வீதிவிடங்கள்' என்று தேவாரப் பாசுரம் கூறும். பெருமான் பக்க வில் 'கொண்டி' என்றழைக்கப்படும் அம்மை யார் எழுந்தருளியிருக்கிறார். அப்பர் சுவாமி கள் 'கண்டு கண்டிவள் காதலித்தன்பதாய்க் கொண்டி யாயினவாறு கோதையே' என்று கூறுகிறார். இந்த சந்நிதியில் உள்ள மரக தத்தாலான சிவலிங்கப் பெருமானுக்கு வீதி விடங்கர் என்று பெயர். எதிரில் நந்தி யெம் பெருமான் நின்ற திருக்கோலத்தில் காட்சி யளிக்கிறார். புவிவேந்தரான சேரமான் பெரு மாள் நாயனாரும், கவி வேந்தரான சுந்தர மூர்த்தி நாயனாரும் இந்த சந்நிதியில் எழுந் தருளியிருக்கின்றார்கள். மூச்சிழுத்தல் விடு தல் காரணமாக ஏற்படும் அசைவே நடனம் ஆகும். இங்கு தியாகராஜர் நடனத்தை அஜபாநடனம் என்று சொல்வர். பங்குனி உத்திரத் திருவிழாவின் தொடக்க நாளிலும், திருத் தேர்விழாவிலும் தியாகராஜர் தம் திரு ஓலக்க மண்டபத்தை விட்டு எருந்தருளுவர். தியாகப் பெருமானுக்குரிய பத்துவகை அங்கப்பொருள்களுக்கும் தனிப்பெயர்கள் உண்டு. அவையாவன :—ஆடு தண்டு-மாணிக்கத்தண்டு; கொடி-தியாகக் கொடி; ஆசனம்-இரத்தின சிம்மாசனம்; மாலை-செங் கழுநீர் மாலை; வாள்-வீரகண்டயம்; நடனம்-அஜபா நடனம்; யானை-ஐராவணம்; மலை-அர தன சிருங்கம்; முரசு-பஞ்சமுக வாத்தியம்; குதிரை-வேதம்; நாடு-சோழநாடு; ஊர்-திரு வாரூர்; ஆறு-காவிரி; பண்—பதினெண் வகைப்பண். இவரை வழிபட்டு உட் பிரகா ரத்தை விட்டு வெளிவந்தால் அம்மையின் சந்நிதியடையலாம். அல்லியங் கோதை யென்றும், நீலோத்பலாம்பிகை என்றும் திரு நாமங்கள். கோயிலுக்குள்ளே சங்குதீர்த் தம், வாணி தீர்த்தம், முக்திக் கிணறு என்ற தீர்த்தங்கள் உள்ளன.

மிகவும் பிரசித்த பெற்றது தேவதீர்த் தம் என்னும் கமலாலயம் என்பது. தீர்த்தத் திற்கு ஆலயம் என்ற பெயர் கொடுத்திருப் பதே அதன் பெருமையை விளக்கும். 'குளம் ஐந்து வேலி' என்ற பழமொழிப் படி இத் திருக்குளம் மிகவும் பெரியது. இதன் நடு வில் உள்ள சிறு தீவில் கோயில் ஒன்றிருக்கி றது. நடுவணநாதர் அல்லது நடுநாயக சுவாமி கோயில் கொண்டிருக்கிறார். படகில் சென்று வழிபடலாம். இக்குளத்தின் நீரைக் கொண்டுதான் நமிநந்தி யடிகள் திருவிளக் கேற்றினார். பிறவிக் குருடரான தண்டியடி கள் நாயனார் இக்குளத்தின் மேற்குப் புறத்தை அகழ்ந்து விரிவாக்கும் போது தடை செய்தோர் குருடர்களாக தாம் பார்வை பெற்று 'நாட்டமிகு தண்டி' யடிக ளானார். திருமுதுகுன்றத்தில் மணிமுத்தாற் றில் எறிந்த பொன்னை இக் குளத்தில் மூழ்கி, பரவையார் எதிரே சுந்தரர் எடுத்த பெருமை யுடையது. இப் பொன்னுக்கு மாற்றுரைத் துக்காட்டிய மாற்றுரைத்த விநாயகர் கோயி லும் குளப்படித் துறையில் இருக்கிறது.

அப்பர் காலத்தில் இத்தலத்தில் திரு வாதிரை விழா நடந்ததை ஒரு பதிகத்தில் பாடியிருக்கிறார். சிறந்த திருவிழா பங்குனி உத்திரத் திருவிழாதான். 'ஆராய்ந்தடித் தொண்டராணிப் பொன் ஆரூர் அகத்தடக் கிப் பாரூர் பரிப்பத்தம் பங்குனி உத்திரம்பாற் படுத்தான்' என்று அப்பர் குறிக்கிறார். சுந்த ரர் பங்குனி உத்திரத் திருநாளுக்கு எங்கிருந் தாலும் திருவாரூர்க்கு வந்து விடுவார். பங்குனி உத்திரத் திருநாளில் பரவையார் அடியார்கட்கு அமுது செய்யும் செலவிற் காகவே திருப்புகலூரில் சென்று இறை வனைப் பாடிப் பொன் பெற்றுக்கொண்டு வந்தார். விழாவில் தேர்த் திருவிழா மிகவும் சிறந்தது. பெரிய தேர்; திருவாரூர்த் தேர் அழகு என்னும் பெயரைப் பெற்றது. 'ஆழித் தேர்வித்தகனையான் கண்டது ஆரூரே' என்பது தேவாரம்.

இத்தலத்திற்கு மிகவும் பெருமை கொடுப்பது மனுமுறை கண்ட சோழனின் வரலாறு. மனுச்சோழன் மகன் தேரிலே வரு கையில் பசுங்கன்று துள்ளி ஓடிவந்து தேர்க் கால்லில் அரைபட்டது. தாய்ப்பசு அரண்மனை

வாயிலில் கட்டியிருந்த ஆராய்ச்சி மணியை அடித்து அறிவிக்க, அரசன் மகனைத் தேர்க் காலில் அரைப்பதே சரியான முறை யென்று முடிவுசெய்து அவ்வாறே செய்தான். கறவைக்கு முறைசெய்த மன்னவன் புகழை, 1800 ஆண்டுகட்கு முன்பு எழுந்த சிலப்பதிகாரத்தில் "வாயில் கடைமணி நடுநா நடுங்க ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சுடத் தான் தன் அரும்பெறல் புதல்வனை ஆழியின் மடித்தோன்" என்று கூறுகிறது. இன்னும் மூவருலாவிலும், திருக்குறள் பரிமேலழகர் உரையிலும், பழமொழியிலும், அரிசமயதீபம் முதலிய நூல்களிலும் இச் செய்தியைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. இதன் காரணமாகவே "திக்கெல்லாம் நிறைந்த புகழ்த் திருவாரூர்" என்று தேவாரம் போற்றுகின்றது போலும். சேக்கிழார் பெருமான், பெரிய புராணம் திருநகரச் சிறப்புக் கூறுமிடத்து இவ்வரலாற்றை விரிவாக எடுத்தோதியுள்ளார்.



கன்றையிழந்த பசு

"ஒருமைந்தன் தன்குலத்துக்குள்ளான்
என்பது முணரான்
தருமம் தன்வழிச் செல்கை
கடனென்று தன்மைந்தன்
மருமம்தன் தேராழி உரஊர்ந்
தான்மனு வேந்தன்
அருமந்த அரசாட்சி
அரிதோ மற்றெளிதோதான்"

என்று அவர் அழகுபடக் கூறியிருப்பது நோக்கத்தக்கது. வடலூர் இராமலிங்க அடிகள் இவ்வரலாற்றை மனுமுறைகண்டவாசகம் என்ற உரைநடை நூலாக எழுதியிருப்பது படித்தின்புறத்தக்கது. இவ்வரலாறு அழகிய கல்சித்திரமாகக் கீழைக்கோபுர வாயிலருகிலுள்ளது.

திருவாரூரின் பெருமை சொல்லும் நூல்களைப்பற்றித் தெரிந்து கொள்வது இன்றியமையாததாகும். சம்பந்தர் ஆறுபதிகங்கள் பாடியுள்ளார். 'சித்தம் தெளிவீர்காள், அத்தன் ஆரூரைப் பத்தி மலர் தூவ, முத்தியாகுமே' என்றும், 'ஆடும் அவிர்சடையான் அவன் மேய ஆரூரைச் சென்று பாடுதல் கைதொழுதல் பணிதல் கருமமே' என்றும், 'முக்கண் ஆதியாரூர் தொழுதுய்யலாம் மையல் கொண்டு அஞ்சல் நெஞ்சே' என்று கூறுகிறார். அப்பர் இருபத்தொரு பதிகங்கள் பாடியுள்ளார். 'ஆரூரரைக் கையினால் தொழா தொழிந்து கனியிருக்கக் காய்கவர்ந்த கள்வனேனே' என்றும், 'விரிசடை விரதிகள் அந்தணர் சைவர் பாசுபதர் கபாலிகள் தெருவினிற் பொலியுந் திருவாரூர் அம்மானே' என்றும், 'குளித்து மூழ்கியும் தூவியும் குடைந்தாடு கோதையர் குஞ்சியுள்புகத் தெளிக்கும் தீர்த்தமருந் திருவாரூர் அம்மானே' என்றும் கூறுகிறார். திருவாதிரைத் திருநாளின் சிறப்பை ஒரு தனிப்பதிகத்தில் ஓதியுள்ளார். ஐம்புலச் சேட்டையால்படும் அவதியை பல பதிகங்களில் சொல்கிறார். சுந்தரர் எட்டு பதிகங்கள் அருளியுள்ளார். அவர் மனம் கசிந்து கசிந்து பாடியிருப்பவை நெஞ்சை உருக்கவல்லன. 'எத்தனை நாள்—எவ்வண்ணம், பிரிந்திருக்கேன் என்னாரூர் இறைவனையே' என்றும், 'ஆரூரானை மறக்கலுமாமே' என்றும், 'திருவாரூரே சிந்திப்பன்' என்றும் திருவாரூர் இறைவன்மீது தமக்குள்ள ஆராக்காதலை அறிவிக்கிறார். திருவாரூரில் அருளிய திருப்புலம்பல் மூன்று பாடல்களில் முதற்பாட்டில் 'ஒங்கெயில் சூழ் திருவாரூர் உடையானே அடியேன் நின்பூங்கழல்கள் அவையல்லா தெவை யாதும் புகழேனே' என்று மணிவாசகர் கூறுகிறார். திருவிசைப்பாவில்

'பத்தியாய் உணர்வோர் அருளைவாய் மடுத்துப்
பருகுதோறமுத மொத்தவர்க்கே
தித்தியா விருக்குந் தேவர்காள் இவர்தந்திருவுரு
இருந்தவா பாரீர்
சத்தியாய்ச் சிவமாய் உலகெலாம் படைத்த
தனிமுழு முதலுமாய் அதற்கோர்
வித்துவாய் ஆரூர் ஆதியாய் வீதி விடங்கராய்
நடம் குலவினரே''

என்று பூந்துருத்தி நம்பி காடநம்பி பாடியிருக்கிறார்.

இன்னும், சம்பந்த முனிவர் இயற்றிய திருவாரூர்ப் புராணம், மறைஞான சம்பந்தரின் கமலாலயச் சிறப்பு, மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் தியாகராஜலீலை, சேரமான் பெருமாளின் திருவாரூர் மும்மணிக்கோவை, குமரகுருபரர் யாத்த திருவாரூர் நான்மணி மாலை, வைத்தியநாத நாவலர் எழுதிய திருவாரூர் பன்மணிமாலை, கமலைஞானப் பிரகாசரின் திருவாரூர்க் குறவஞ்சி, தியாகப்பள்ளு, அந்தகக் கவி வீரராகவ முதலியார் இயற்றிய திருவாரூர் உலா, சைவ எல்லப்ப நாவலரின் திருவாரூர்க்கோவை, கீழ் வேளூர்-குருசாமி தேசிகர் இயற்றிய திருவாரூர் ஒரு துறைக்கோவை, கச்சியப்பரின் கந்தபுராணக் கந்தவிரதப்படலத்தில் வரும்பாடல், திருவாரூர்-சதாசிவ தேசிகர் இயற்றிய திருவாரூர் இரட்டைமணிமாலை, பாபவிநாச முதலியாரின் திருவாரூர்ப்பதம், தியாகராஜ செட்டியாரின் திருவாரூர் பாதி திருவொற்றியூர் பாதி வேண்பா அந்தாதி, மருந்து வெண்பாமாலை, தருமையாதீன வெளியீடான அஜபா நடேசர் பதிகம், சித்தீச்சரம் தட்சிணாமூர்த்தி பதிகம், ஷை மாலை, தேவாசிரிய மான்மியம், கமலைபராசத்திமாலை, தேரூர்ந்த சோழபுராணம், கமலாம்பிகை பிள்ளைத் தமிழ், தியாகராஜர் கழிநெடில், ஷை கலிப்பா, திருவாரூர் விநாயகர் இரட்டை மணிமாலை முதலியன இத்தலத்தைப்பற்றியனவே. சேக்கிழார் பெரிய புராணத்தில் திருநகரச் சிறப்பு என்ற பகுதியில் திருவாரூரைப்பற்றி அழகாக எடுத்துரைக்கின்றார். அருணகிரிநாதர் திருப்புகழில் 15 பாடல்களில் இப்பதியைப்பற்றிப் பாடியிருக்கின்றார். வடமொழியில் தியாகராஜ லீலை, ஆடகேஸ்வர மகாத்மியம், கமலாலய மகாத்மியம், நாகரகாண்டம், சமற்காரபுரமான்மியம், தியாகராஜபுர மான்மியம், தேவயாகபுர மான்மியம், தேவாசிரிய மகாத்மியம், முசுகுந்தபுர மான்மியம், இராமகயா மான்மியம், ஸ்ரீபுர மான்மியம், ஸ்கந்தபுர மானமியம், க்ஷேத்ரவர புரமான்மியம், தியாகராஜாஷ்டகம் முதலிய நூல்களும் உள்ளன.

இக்கோயிலில், பல தமிழ், கிரந்த, கன்னடக் கல்வெட்டுக்கள் உள்ளன. அவை சோழ, பாண்டிய, விஜயநகர, நாயக்க, மராட்டிய மன்னர் காலத்தவை. அவை பெரும்பாலும்

நிலம், விளக்கு, பூசை முதலியவற்றிற்குப் பல விதமான தானங்களைச் செய்ததைக் குறிக்கின்றன. கன்றையிழந்த பசுவிற்கு நீதி செலுத்திய மனுச்சோழனைப் பற்றியும், செம்பியன்மாதேவியார் அரநெறிக் கோயிலைக் கட்டியதையும், பூங்கோயில் நம்பி என்பான் **வீர அனுக்க விஜயம்** என்ற நூல் எழுதியதையும், தேவாரம் பாடுவார்க்கு நிலம் விடப்பட்டதையும், கோயிலில் ஓராண்டில் 56 திருவிழாக்கள் நடைபெற்ற தென்பதையும், நாகராசன் என்பான் மேற்குக் கோபுரத்தைக் கட்டியதையும் சொல்லும் கல்வெட்டுக்கள் முக்கியமானவை. சுந்தரர் தாயான இசை ஞானியார் திருவாரூரில் இருந்த ஞான சிவாச்சாரியார் மகளார் என்று ஒரு கல்வெட்டுக் கூறுகிறது.

இவ்வூரில் பார்க்க வேண்டியவை தண்டபாணிகோயில், இராஜ துர்க்கை கோயில், பரவையார் கோயில், மாணிக்கநாச்சியார் கோயில், திருவாரூர்ப் பரவையுண் மண்டளி முதலியன. பரவையுண்மண்டளி சுந்தரர் ஒரு பதிகத்தால் பாடப்பெற்ற பதி. துலா நாயனார் கோயில் என்றும் வழங்குவர். இறைவன் பெயர் பரவையுண் மண்டலேசர்; தேவியின் திருநாமம் பஞ்சின் மெல்லடியாள். கல்வெட்டில் மண்டளி யுடைய மகாதேவர் என்ற பெயர் காணப்படுகிறது. திருவொற்றியூரில் சங்கிலியார்க்குச் செய்து கொடுத்த சூளுரையை மீறி அவ்வூர் எல்லை தாண்டியதும் சுந்தரர் இரண்டு கண்களையும் இழந்தார். காஞ்சிபுரத்தில் பதிகம் பாடி ஒரு கண் பெற்றார். மற்றொருகண்ணை இத்தலத்தில் பதிகம் பாடிப் பெற்றார் என்றும் கூறுவர்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் இம்மூன்றும் சிறப்பாக ஒருங்கே அமையப் பெற்ற திருவாரூருக்குச் சென்று வழிபடுவது மிகவும் அவசியம்.

நிலைபெறுமா றெண்ணுதியேல்
நெஞ்சே நீவா நித்தலுமெம்
பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு
மெழுக்குமிட்டுப் பூமாலை
புனைந்தேத்திப் புகழ்ந்துபாடி
தலையாரக் கும்பிட்டுக்
கூத்துமாடி சங்கரா
சயபோற்றி போற்றி யென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம்
ஆதீயென்றும் ஆரூரா
என்றென்றே அலறு நில்லே

—திருநாவுக்கரசர்.

## பிள்ளையன் கட்டளைகள் (திருநெல்வேலி)

குற்றாலம் ஸ்ரீ குழல்வாய்மொழி யம்பிகை சமேத ஸ்ரீ திருக்குற்றால நாதர் திருக்கோயிலில் பிள்ளையன் கட்டளை சார்பில் "பவித்ர உத்ஸவம்" **16, 17, 18-11-1958** ஆகிய மூன்று தினங்களிலும் விமரிசையாக நடைபெற்றது. **18-11-58** தெய்தியன்று சைவ சித்தாந்த சரபம், மஹா மஹோபாத்யாய பழநி சிவ ஸ்ரீ ஈசான சிவாச்சாரிய சுவாமிகள் "சிறப்புடைய புராணங்கள்" என்னும் பொருள்பற்றி, நெல்லை, அறநிலைய பாதுகாப்பு உதவியாணையாளர், திரு K. ராஜா அவர்கள் முன்னிலையில் சொற்பொழிவாற்றினார்கள்.

## அரியலூரில் வார வழிபாடு

விளம்பி ஆண்டு கார்த்திகை மாதம் **5**-ந்தேதி (**20-11-58**) முதல் **29-11-58** வரையில் அரியலூர் ஸ்ரீ கோதண்டராமசாமி கோயிலில் இருக்கும் ஸ்ரீ நரசிம்மஸ்வாமிக்கு லக்ஷார்ச்சனை நடந்தது. அரியலூர் ஸ்ரீ ஆலந்துறையார், கோதண்டராமசுவாமி ஆலயங்களில் **28-12-58**-ல் வார வழிபாடு ஆரம்பிக்கப்பட்டது. **11-1-59** தேதி ஞாயிற்றுக்கிழமையன்று அரியலூர் கோட்டம், அற நிலையங்கள் சார்பாக, திருப்பாவை-திருவெம்பாவை முதல் மகாநாடு நடந்தது.

# காரைவன ஸ்ரீ அரங்கநாத சுவாமியின்

# திருத்தேர் விழா

சீர்பெறு மரங்கநாதர் திருவிழா வைபவத்தைப்
பார்தனி லடியார்க் கெல்லாம் பகர்சமாச் சாரமான
ஏர்பெறு ஸ்ரீமுகத்துக் கோரிடையூறு வராது காக்க
ஊர்திருக் குருகைமாரனெண் சுதன் பதங்கள் வாழி.

காரமடை என்னும் ஸ்தலம் கோயம்புத்தூர் மேட்டுப்பாளையம் பிரிவில் மேட்டுப்பாளையத்துக்கு இப்பால் உள்ளது.

நிகழும் விளம்பி வருஷத்திற்குச் சரியான இங்கிலீஷ் 1959-ஆம் வருஷம்.

| பிப்ரவரி மாதம் தேதி | மாசி மாதம் தேதி | | |
|---|---|---|---|
| 16. | 4. திங்கள் | திருமுளை நகர சோதனை. | |
| 17. | 5. செவ்வாய் | துவஜாரோகணம் (கொடி யேற்றம்) அன்ன வாகனம் | |
| 18. | 6. புதன் | சிம்ம வாகனம் | |
| 19. | 7. வியாழன் | அனுமந்த வாகனம் | |
| 20. | 8. வெள்ளி | கருட சேவை | |
| 21. | 9. சனி | திருக்கல்யாண புஷ்ப விமானம் | |
| 22. | 10. ஞாயிறு | யானை வாகனம் | |
| 23. | 11. திங்கள் | காலை மகர லக்கினத்தில் ரதாரோகணம் திருத்தேர் பிரம்மோத்ஸவம் | தண்ணீர் சேவை |
| 24. | 12. செவ்வாய் | பரிவேட்டை குதிரை வாகனம் | பந்த சேவை தலைமுடி பிரார்த்தனை |
| 25. | 13. புதன் | சேஷ வாகனம் தெப்போத்ஸவம் | |
| 26. | 14. வியாழன் | சந்தான சேவையும், சாத்து முறை தீர்த்தவாரி உத்ஸவமும் பூர்த்தி | |
| 27. | 15. வெள்ளி | வசந்தம் | |

இத்தியாதி வைபவங்களை உத்தமர்களாகிய சாதுக்களனைவரும் வந்து தரிசித்து, சக்தியானுசாரம் பொருள் உதவி செய்தும், இகபர லாபங்களை அடைய வேண்டுகிறோம். டை தினங்களில் வழக்கப்படி காலை 9 மணிக்கு காலை விழா நடைபெறும்.


வாழி வானவர் வாழி புவிமகள் வாழி காரைவனத்தரங்கேசனார் தாள்களுற்சவம் சேவிக்கும் சாதுக்கள் வாழி இந்த நிருபமும் வாழியே.

ஸ்ரீ அரங்கநாத ஸ்வாமி தேவஸ்தானம்,
காரமடை,
2—1—1959

K. துரைசாமி நாயுடு,
S. K. திம்மே கவுடர்
A. அரங்கைய கவுடர்
தர்மகர்த்த குழுவினர்.

T. K. சுப்ரமணியம்
இறைபணியாளர்

# ✳ திருக்குடந்தை ✳



CONNEMARA P... 18 MA... MAD...

சாரங்கபாணிசுவாமி கோயில்

ஊர்களின் பெருமையை விளக்குவதற்கு நம் நாட்டில் பல பழமொழிகள் எழுந்துள் ளன; அவைகளிலும் தலங்களின் மகிமை யைச் சொல்லும் பழமொழிகள் மிகச் சிறந் தன. 'திருவாரூர்த் தேரழகு, திருவிடைமரு தூர் தெரு அழகு, கும்பகோணம் கோயில் அழகு, மன்னார்குடி மதில் அழகு, வேதாரணி யம் விளக்கழகு' என்பவற்றின் உண்மை நேரில் அவ்வூர்களைப் பார்த்தோருக்குத் தெரி யும். கோயில்கள் நிறைந்த ஊர் கும்ப கோணம். தேவார திவ்வியப் பிரபந்தங்களால் பாடல் பெற்ற சிவ விஷ்ணு ஆலயங்கள்

அங்கே உண்டு. பிரமனுக்கும் அங்கு ஒரு கோயில் இருக்கிறது. மும்மூர்த்திகளுக்கும் கோயில்கள் உள்ளது இப்பதிக்குத் தனிச் சிறப்பைத் தருகிறது. மேலும் காவிரி, அரிசிலாறு (அரிசொல்லாறு) என்ற இரண்டு ஆறுகள் இருமருங்கும் நகருக்கு மாலையென ஓடி அழகு செய்கின்றன. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடக்கும் மகாமகப் பெரு விழாவில் பல இலட்சக்கணக்கான மக்கள் கூடித் தீர்த்தமாடுவர். ஊரின் பெயர் கும்பகோணம் என்று சாதாரணமாக வழங்குகிறது. கோயில் கல் வெட்டுக்களிலும், தேவாரத்திவ்வியப் பிரபந்தங்களிலும் குடந்தை, குடமூக்கு என்ற பெயர்கள் ஆளப்படுகின்றன. இத்தலத்தில் ஆழ்வார்களால் மங்களசாசனம் செய்யப்பெற்ற சாரங்கபாணி சுவாமி கோயிலும், தேவாரப் பாடல் பெற்ற கும்பேசுவரர், நாகேசுவரர், காசி விசுவநாதர் ஆலயங்களும் முக்கியமானவை. சோழர்களுக்கு ஒரு காலத்தில் தலைநகராகவும் இருந்ததென்றும், சோழன் மாளிகை என்ற ஊர் கும்பகோணத்திற்கு அருகில் இருப்பதாலும், ஆழ்வார்கள், அப்பர், சம்பந்தர் இவர்களால் இங்குள்ள தலங்கள் பாடல் பெறறிருப்பதாலும் கி.பி. 7,8,-ஆம் நூற்றூண்டிற்கு முற்பட்ட தொன்மையுடையதாக இருக்கவேண்டும் என்றும் ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

## சாரங்கபாணி சுவாமி கோயில்

**எங்கள் பெருமா னிமையோர் தலைமகன்நீ**
**செங்க ணெடுமால் திருமார்பா-பொங்கு**
**படமூக்கி னுயிரவாய்ப் பாம்பணைமேல் சேர்ந்தாய்**
**குடமூக்கில் கோயிலாக் கொண்டு**

—பூதத்தாழ்வார்.

ஆழ்வார்களால் மங்களசாசனம் செய்யப்பட்ட திவ்விய தேசங்கள் நூற்றெட்டு; சோழ நாட்டில் நாற்பதுள்ளன. அவைகளில் ஒன்று திருக்குடந்தை என்னும் திருப்பதி. கும்பகோணம் கோயில் அழகு என்பதற்குக் காரணமாக நிற்பது சாரங்கபாணி சுவாமி கோயிலின் கோபுரம்தான். ஆழ்வார்களில் அறுவரும், ஆண்டாள் ஒருவரும் ஆக எழுவர்கள் பாசுரம் பெற்றுள்ளது இப்பழம் பெரும்பதி. பாடப்பெற்ற ஆழ்வார்களின் எண்ணிக்கைப்படி திவ்விய தேசங்களை வரிசையாக வைத்து நோக்கும்போது திருவரங்கம், திருப்பதி, திருக்குடந்தை என்று மூன்றுவதாக அமைந்துள்ள பெருமை உடையது.

இத்தலத்தைப்பற்றி, கும்பகோணம், திருவிண்ணகர், திருச்சேறை, நந்திபுர விண்ணகரம், வானமாமலை, ஸ்ரீ முஷ்ணம் முதலிய வடமொழி மகாத்மியங்களில் பேசப்பட்டிருக்கின்றது. பிரமன் அமுதத்தை நிரப்பி வைத்த குடம் பிரளய வெள்ளத்தில் இவ்விடத்துக்கு மிதந்து வந்து குடமூக்கின் வழியாக அமுதத்தை வெளிப்படுத்தியதால் கும்பகோணம் என்ற பெயர் வந்தது. வடமொழித் தல புராணம்,

"கும்பஸ்ய கோணதோ யஸ்மிந்
ஸுதாபூரம் விநிஸ்ருதம்
தஸ்மாத்து தத்பதம் லோகே
கும்பகோணம் வதந்திஹி"

என்று கூறுகிறது. குடமூக்கு குடந்தையென்று ஆழவார்களின் பாசுரங்களில் காணப்படுகிறது. சூரியன் வழிபட்டதால் **பாஸ்கர க்ஷேத்திரம்** என்றும், இலக்குமியான கோமளவல்லிக்கும், எம்பெருமானை சாரங்கராஜனுக்கும் இங்கு திருமணம் நடந்ததால் **கல்யாணபுரம்** என்றும் இப்பதிக்குப் பெயர்கள் வழங்குகின்றன.

எம்பெருமானுக்கு சாரங்கபாணி, சாரங்கராஜன், சர்ரங்கதரன், ஆராவமுதன் என்று பல திருநாமங்கள் வழங்குகின்றன. தாயார் திருநாமம் கோமளவல்லி என்பது. ஆழ்வார்கள், ஆண்டாள் இவர்கள் 51 பாசுரங்களில் இந்த திவ்விய தேசத்தைப் புகழ்ந்திருக்கிறார்கள். பெரியாழ்வார்-3 பாசுரங்கள். 'குடந்தை கிடந்த எங்கோவே குருக்கத்திப் பூச்சூட்ட வாராய்' என்று ஒன்றில் கூறுகிறார். ஆண்டாள் அருளிய ஒரே திருப்பாசுரத்தில் 'குடந்தைக்கிடந்த குடமாடி நீலார் தண்ணந்துழாய் கொண்டென் நெறிமென் குழல்மேல் சூட்டீரே' என்று வேண்டுகிறார். திருமழிசை ஆழ்வார் பாடிய பாடல்கள் எழு. அவைகளில் ஒன்று,

**'நடந்த கால்கள் நொந்தவோ**
**நடுங்கஞால மேனமாய்**
**இடந்தமெய் குலுங்குவோ விலங்கு**
**மால் வரைச்சுரம்**

கடந்தகால் பரந்தகா விரிக்
கரைக் குடந்தையுள்
கிடந்தவா றெழுந்திருந்து பேசு
வாழி கேசனே'

என்பது படித்துப் படித்துச் சுவைத்துக் களித்தின்புறத்தக்கது. ஆழ்வார் சொன்ன வண்ணம் சற்று எழுந்தருளியுள்ள பாவனையாக எம்பெருமான் காட்சியளிப்பதுடன், தன்னுடைய பிரான் என்னும் பெயரை **திருமழிசைப்பிரான்** என்று ஆழ்வார்க்கு ஆக்கி, தனக்கு **ஆராவமுதாழ்வான்** என்று அழைத்துக்கொண்டான் என்பர் அறிஞர். **திருமங்கையாழ்வார்** 25 பாசுரங்கள் அருளியுள்ளார். அவைகளில் ஒன்றில்,

'இற்பிறப்பறி யீரிவரரென்னீ ரின்னதோர்
தன்மை யென் றுணரீர்
கற்பகம் புலவர்களைக ளென்றுலகில்
கண்டவா தொண்டரைப்பாடும்
சொற்பொருளாளீர் சொல்லுகேன் வம்மின்
சூழ்புனல் குடந்தையே தொழுமின்
நற்பொருள் காண்மின் பாடிநீருய்மின்
நாராயண வென்னும் நாமம்'

என்று அறிவுறுத்துகிறார். இத்தலத்தின் மகா ரதத்தைக் கண்ணுற்ற இவ்வாழ்வார் சித்திர ரதபந்த ரூபமாக 'திருவெழு கூற்றிருக்கை' என்னும் பாசுரத்தை அருளினார் என்பர். இதை,


'சீரார் திருவெழு கூற்றிருக் கையென்னும்
செந்தமிழால்
ஆராவமுதன் குடந்தைப் பிரான்ற
னடியிணைக்கீழ்
ஏரார் மறைப்பொரு ளெல்லா மெடுத்திவ்
வுலகுய்யவே
சோராமற் சொன்ன வருள் மாரி பாதம்
துணைநமக்கே'

என்று ஒரு தனியன் புகழ்ந்து பேசுகிறது. **பூதத்தாழ்வார்** இரண்டு பாடல்களிலும், **பேயாழ்வார்** இரண்டு பாசுரங்களிலும் இந்த தலத்தைச் சிறப்பித்துள்ளார்கள். **நம்மாழ்வார்** பதினொரு பாசுரங்களில் இதன் பெருமையைப் பேசியுள்ளார்.

"ஆராவமுதே யடியேனுடலம்
நின்பாலன்பாயே
நீராயலைந்து கரைய வுருக்குகின்ற
நெடுமாலே
சீரார் செந்நெல் கவரிவீசும்
செழுநீர்த் திருக்குடந்தை
ஏரார்கோலம் திகழக் கிடந்தாய்
கண்டே னெம்மானே"

என்று இவர் அருளிய பாசுரத்தில் **ஆராவமுதே** என்ற திருவாய்மொழியைக்கொண்டே மறைந்துபோகும் நிலையிலிருந்த திவ்வியப் பிரபந்தங்களை உலகுய்ய வெளிப்படுத்தினார் ஸ்ரீமந் நாதமுனிகள் என்பர். ஆதலால் திவ்வியப் பிரபந்தங்களை உலகுக்கு அளித்தது இந்த திவ்விய தேசமே என்று சொல்லலாம். இன்னும், **கம்பர்** ஒரு பாடலும், **பிள்ளைப்பெருமாளைய்யங்கார்** நூற்றெட்டுத் திருப்பதியந்தாதியில் ஒரு பாடலும் இப்பதியைப்பற்றியன. **ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன்**, தாத்பர்ய ரத்னவளியில் ஆராவமுதே என்கிற பதிகத்தின் பொருளை ஒரு சுலோகத்தில் விளக்கியுள்ளார்.

கோயில் வாயிலில் வானுற ஓங்கி நிற்பது திருக்கோபுரம்; பதினொரு நிலைகளையுடையது; சுமார் 150 அடி உயரமுள்ளது; பல அற்புதச் சிற்பங்களுடன் திகழ்வது. உள்ளே பெருமாள் சந்நிதிக்குச் செல்ல இரு வாசல்கள் உண்டு. ஆடி முதல் மார்கழி முடியத் திறந்திருப்பது தட்சிணயன வாசல்; தை முதல் ஆனிவரைத் திறந்திருப்பது உத்தராயண வாசல். இவ்வாசல்களுக்குமேல் இரண்டு கோபுரங்களும் இருக்கின்றன. எம்பெருமான் கிழக்கே திருமுகமண்டலம்; சயனத்திருக்கோலம் அதுவும் உத்தியோக சயனம். கிடந்த சேவை யழகைக் கண்டு அனுபவித்தவர் 'ஆரா-அமுது', 'தெவிட்டாத தெள்ளமிழ்து' என்று கூறுமல் வேறென்ன கூற முடியும்! விமானம்—வைதிக விமானம், ஒரு பெரிய ரதம் போல யானை, குதிரைகள் கட்டுப்பட்டு நான்கு சக்கரங்களுடனும், பல சித்திரப் பதுமைகளுடனும் அழகாக அமைந்துள்ளது. இதுபல்லவச் சிற்பக் கலைகளுள் ஒன்று. பெருமாள் சந்நிதியின் வலதுபுறம் கிழக்கு முகமாக **கோமளவல்லித் தாயார்** சந்நிதி இருக்கிறது. இன்



பொற்றாமரைக்குளம்

னும் பாதாள சீனிவாசன், சேனை முதலியார், இராஜகோபாலன், இராமபிரான், முதலிய சந்நிதிகள் இக்கோயிலில் பார்க்கத்தக்கவை. மற்றும் ஆழ்வார்கள், ஆண்டாள் சந்நிதி களும் இருக்கின்றன. கோயிலின் வடக்குப் பிரகாரம் **தூநிலாமுற்றம்** எனப் பெரியாழ்வார் பாசுரத்தில் பாடப் பெற்றதென்பர். **அணியரங்கன் திருமுற்றம்** என ஸ்ரீரங்கத்தில் உள்ளதைக் குலசேகராழ்வாரும், திருக்கண்ணபுரத்தில் **நீணிலாமுற்றம்** என்று திருமங்கையாழ்வாரும் பாடியுள்ளார்கள். மூன்று முற்றங்களான இவற்றை மேலவீடு திருவரங்கம், கீழவிடு திருக்கண்ணபுரம், நடுவீடு திருக்குடந்தை என சம்பிரதாயமாகக் கூறுவர்.

இத்தலத்தின் தீர்த்தம் பொற்றாமரை அல்லது ஏமபுஷ்கரிணி. ஏமரிஷி பூசித்துப் பேறு பெற்றது இப்பதியில்தான். இங்கு மார்கழி, தை, சித்திரை இந்த மாதங்களில் பெருந்திருவிழாக்கள் நடைபெறும். தமிழ் நாட்டிலுள்ள பெரிய தேர்களில் ஒன்று இங்கிருக்கிறது. சித்திரங்கள் நிறைந்த இத்தேர் சித்திரை மாதத்தில் வீதிவரும். ஆனால் இப்போது நின்றிருக்கிறது.

இக்கோயிலில் விஜயநகர மன்னர் சதாசிவராயர் காலத்திய (சக 1482 ஆம் ஆண்டு) கல்வெட்டில் சாரங்கபாணி தேவர்க்கு அதிரச அமுதுக்கு நிலம் வாங்குவதற்கு கனக செட்டி பொன் வழங்கியதைக் கூறுகிறது.

**இராமசாமி கோயில்:** தஞ்சை நாயக்க மன்னரின் மந்திரியாயிருந்த கோவிந்த தீட்சிதரால் திருப்பணி செய்யப் பெற்றது. மகா மண்டபத் தூண்களில் உள்ள கற்சிற்பங்கள் கண்கவர் வனப்பினை யுடையவை. கோயிற்


பிரகாரச் சுவரில் இராமாயண வரலாறு முழுமையும் ஓவியங்களாகத் தீட்டப் பெற்றிருக்கிறது. கோயில் கடைத்தெரு தென்கோடியில் உள்ளது.

**சக்கரபாணிகோயில்;** இந்த விஷ்ணு கோயில் கடைத்தெருவின் வடகோடியில் அமைந்துள்ளது. இதுவும் பார்க்கத்தக்கது.

### கும்பேசுவரர்கோயில்


கும்பகோணத்தில் தேவாரப் பாடல் பெற்ற மூன்று சிவத்தலங்களுள் இது ஒன்று. சாரங்கபாணி சுவாமி கோயிலுக்கு மேல்புறம் கிழக்கு நோக்கி யிருக்கிறது. அப்பர், சம்பந்தர் தேவாரப் பதிகங்களில் 'குடமூக்கு' என்றே குறிக்கப்பட்டிருக்கிறது. கோயிலில் மூன்று கோபுரங்கள் இருக்கின்றன. முதலில் உள்ள இராஜகோபுரம் 128 அடி உயரமுள்ளது; ஒன்பது நிலைகளையுடையது; அழகிய சிற்பங்கள் நிறைந்துள்ளது. கும்பேசர் ஆவுடையார் சதுர வடிவமானது. உடைந்த அமுத கடத்தை ஒன்று சேர்த்து அமுதங்கலந்த வெண்மணல் நிரப்பி ஒரு பெட்டியில் வைத்ததாக வரலாறு. குடத்தின் மூக்குப்போல வாய் அமைந்திருக்கிறது. இறைவனுக்கு ஆதிகும்பேசுவரர், அமுதகும்பேசர், அமுதேசர் என்னும் திருநாமங்கள் உண்டு. சம்பந்தர் பாடலில் குழகன் என்றே கூறுகிறார். கும்பேசுவரரை அடுத்துள்ள அர்த்த மண்டபத்தில் மனோன்மணி இருந்த திருக்கோலத்தில் காட்சியளிக்கிறார். இக்கோயிலிலுள்ள முருகப் பெருமானுக்கு ஆறு திருமுகங்களும், தனிச் சிறப்பாக ஆறு திருக்கரங்களும் உள்ளன. அம்மன் சந்நிதி மூன்றுவது உட்பிரகாரத்தில் வடமேற்கில் இருக்கிறது. இறைவியின் திருநாமம் மங்களாம்பிகை. சக்தி பீடங்களுள் ஒன்றான மந்திர பீடத்தில் விளங்குவதால் மந்திரபீடேசுவரி என்ற பெயரும் உண்டு. அழகும் அருளும் நிறைந்தது அம்பிகையின் திருவுருவம்;

கும்பேசுவரர் கோயில் ஆகாயத்தோற்றம்



பார்த்தவர் மனதை ஈர்க்கும் பண்புடையது. அமுதகடத்தை சிவபெருமான் வேட உருவம் கொண்டு அம்பெய்தார் என்று ஒரு வரலாறு. கிராதமூர்த்தி என்ற பெயருடன் அவர் சிலை இந்தப் பிரகாரத்தில் இருக்கிறது. கோயில் உள்ளே இருக்கும் தீர்த்தம் அமுத புஷ்கரணி என்பது. தலவிருட்சம் வன்னி மரம்.

இத்தலத்திற்கு மிகவும் மகிமை தருவது **மகாமகக்குளம்**. இதை அமுத சரோருகம், கன்னியர் தீர்த்தம் என்ற பெயர்களாலும் அழைக்கப்படும். ஆண்டுதோறும் மாசிமகத்தில் கும்பேசுவரர் பஞ்சமூர்த்திகளுடன் எழுந்தருளி இக்குளத்தில் தீர்த்தம் கொடுப்பர். பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறைவரும் **மாமாங்கம்** என்று வழங்கும் மகாமக விழாவே மிகவும் சிறப்புடையது. கடைசியாக இவ்விழா 25—2—1956ல் நடந்தது. மாசிமாதம் மக நட்சத்திரத்தில் குரு சிங்கராசியிலும், சந்திரன் கும்பராசியிலும் வரும் பௌர்ணமி நாள் பன்னிரண்டு ஆண்டுக்கு ஒருமுறை வரும் போது இப்பெரு விழா நடக்கும். அன்று, கங்கை, யமுனை, சரயு, நருமதை, சரசுவதி, கோதாவரி, பயோடினி, காவிரி, குமரி முதலிய ஒன்பது நதிகளும், இம்மகாமகக் குளத்தில் வந்து கூடுவதாகச் சொல்லப்படுகிறது. நவ நதிக்கன்னியரின் திருவுருவங்கள் தீர்த்தக் கரையில் உள்ள மண்டபத்தில் அண்மையில் பிரதிஷ்டை செய்யப் பெற்றிருக்கின்றன. அந்த நவகன்னியரின் உருவங்கள் குளத்தின் வடபால் உள்ள காசிவிசுவநாதர் கோயிலிலும் உள்ளன. மகாமகக் குளத்தில் ஒன்பது நதித்




மகாமகக்குளம்



கன்னியர் தீர்த்தம், எட்டு திக்குப் பாலகர்களின் தீர்த்தம், ஒரு பிரம தீர்த்தம், நடுவே அறுபத்தாறு கோடி தீர்த்தம் ஆக பத்தொன்பது தீர்த்தங்கள் உள்ளன. குளத்தைச்சுற்றி 16 மண்டபங்கள் இருக்கின்றன. இவைகளை, தஞ்சை மன்னன் அச்சுதப்ப நாயக்கரின் அமைச்சராக இருந்த கோவிந்த தீட்சிதரால் கி. பி. 1542-ல் கட்டப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. இம்மண்டபங்களில் பிரமதீர்த்தேசுவரர், முகுந்தேசுவரர், தனேசுவரர், இடபேசுவரர், பரணேசுவரர், கோணேசுவரர், பக்திகேசுவரர், பைரவேசுவரா, அகத்தீசுவரர். வியாசேசுவரர், உமாபாகேசுவரர், நிருதீசுவரர், பிரமேசுவரர், கங்காதரேசுவரர், முக்ததீர்த்தேசுவரர், க்ஷேத்திரபாலேசுவரர் முதலிய பதினாறு இலிங்கமூர்த்திகள் கோயில் கொண்டிருக்கின்றனர். இக்குளத்தில் மாசி மகத்தில் நீராடியவர்கள் சகலபாவங்களும் நீங்கி, பல பேறுகள் பெற்று, இம்மையிலும் மறுமையிலும் இன்பும் எய்துவர் என்று நம்பப்படுகிறது. இந்தியாவில் நடைபெறும் மிகப் பெருவிழாக்களில் ஒன்று மகாமகத் தீர்த்த விழா.

இத்தலத்தைப்பற்றி அப்பரும், சம்பந்தரும் ஒவ்வொரு பதிகம் பாடியுள்ளனர். சம்பந்தர் இப்பதியின் இயற்கை வளத்தை நலம் பெறப் புகழ்ந்து பாடுகிறார். அப்பர் தேவாரத்தில் தீர்த்தத்தைப்பற்றிக் குறிப்பிடுகிறார். ஒரு திருத்தாண்டகத்தில் "குடமூக்கே குடமூக்கே என்பீராகில் கொடுவினைகள் தீர்ந்து அரனைக்குறுகலாமே" என்கிறார்.

**சேக்கிழார்**, பெரிய புராணத்தில் இத்தலத்தைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். தொண்டை நாட்டுத் திருவேற்காட்டில் சூதர் என்ற **மூர்க்க நாயனார்** என்பவர் அடியார் வழிபாட்டில் தம் பெரும் பொருள் முழுவதும் செலவழித்து, இத்தலத்துக்கு வந்து சூதாடி அதனால் வரும் பொருளைக் கொண்டு தாம் மேற்கொண்ட தொண்டைத் தொடர்ந்து நடத்திச் சிவனடிப் பேறு பெற்றனர். **அருணகிரிநாதர்**

கும்பகோணம் என்ற பேர் குறித்த ஆறு திருப்புகழ்ப் பாடல்களும், குடந்தை என்ற பேர் வரும் மூன்று பாடல்களும் பாடியுள்ளார். மகாவித்வான் மீனுட்சி சுந்தரம் பிள்ளையவர்கள், திருக்குடந்தைப் புராணம், மங்களாம்பிகை பிள்ளைத்தமிழ், குடந்தைத் திரிபந்தாதி முதலிய நூல்களை இயற்றியுள்ளார்கள். பாபநாச முதலியார், கும்பேசர் குறவஞ்சி என்ற அழகிய நூலை யாத்துள்ளனர். யாழ்ப்பாணம் முருகேசம் பிள்ளை யென்பார் குடந்தைச் சிலேடை வெண்பாவையும், சாமிநாத பிள்ளை என்பவர் மங்களாம்பிகை மாலையும் பாடியிருக்கின்றனர். குடந்தையந்தாதி, திருக்கும்பேச்சுரமாலை என்ற நூல்களும் இத்தலத்தைப் பற்றியனவே. வேறு பல தனிப் பாடல்களும் இருக்கின்றன.

இக் கோயிலில் சாலிவாகன சகம் 1722-ஆம் ஆண்டுக் கல்வெட்டுக்கள் இரண்டும், மற்றுமொரு கல்வெட்டும் உள்ளன. இவைகள் கோயில் திருப்பணிகளைக் குறிக்கின்றன.

தொண்ட ராகித் தொழுது பணிமினே
பண்டை வல்வினை பற்றற வேண்டுவீர்
விண்ட வர்புரம் மூன்றெரு மாத்திரைக்
கொண்ட வன்உறை யுங்குட மூக்கிலே

—திருநாவுக்கரசர்

### நாகேசுவரர் கோயில்:

கும்பேசுவரர் கோயிலுக்குச் சற்றுத் தென் கிழக்காக உள்ளது. தேவாரப் பாடல் பெற்ற திருக்குடந்தைக் கீழ்க்கோட்டம் என்ற திருத்தலம். ஆதிசேடன் வழிபட்டமையின் நாகேச்சுரம் என்று அழைக்கப் பெறுகிறது. கோயில் கிழக்கு நோக்கியுள்ளது; அழகிய கோபுரமுடையது. இறைவனின் திருநாமங்கள் நாகேசுவரர், நாகநாதர், வில்வவனேசர், பாதாளலிங்கேசர் என்பன. இக் கோயிலிலுள்ள கல்வெட்டுக்களில் சுவாமியின் பெயர்-திருக்கீழ்க் கோட்டத்துப் பரமசுவாமி, திருக்கீழ்க்கோட்டத்து உடையார், திருக்கீழ்க் கோட்டமுடைய நாயனுர், திருக்கீழ்க் கோட்டத்துப் பட்டாரகர், திருக்கீழ்க் கோட்டத்துப் பெருமானடிகள், திருக்கீழ்க் கோட்டத்து மகாதேவர் என்றெல்லாம் காணப்படுகிறது. இறைவியின் பெயர் பெரிய நாயகி என்பது. ஆண்டுக் கொருமுறை சித்திரை மாதம் (11, 12, 13-ஆம் தேதிகள்) மூன்று நாட்களில் மூலவர் இலிங்க மூர்த்தியின் மேல் சூரிய கிரணங்கள் படுகின்றன. இக் கோயிலின் நடராஜ சபை சிறந்தவொன்று. தேர்போல் உருளைகளுடன் யானைகளும் குதிரைகளும் இழுக்கும் பாவனையில் கல்லால் ஆக்கப் பெற்றிருக்கிறது. அம்பிகை சந்நிதி கிழக்கு நோக்கியிருக்கிறது. சூரியன், சந்திரன் இவர்களுக்குத் தனிச் சந்நிதிகள் உண்டு, கோயிலுக்குள் சிங்க தீர்த்தம் என்ற கிணறு இருக்கிறது. தெற்குக் கோபுரத்தின் வெளியே சூரிய புஷ்கரணி என்னும் தீர்த்தம் இருக்கிறது. இத்தலத்திற்கு திருநாவுக்கரசரின் தேவாரப் பதிகம் ஒன்றிருக்கிறது. அதில் ஒரு பாடலில்

"தாவிமுதற் காவிரி நல்யமுனை கங்கை சரசுவதி
பொற்றாமரை புட்கரணி தெண்ணீர்க் கோவி
யொடு குமரிவரு தீர்த்தஞ்சூழ்ந்த குடந்தைக்கீழ்க்
கோட்டத் தெம் கூத்தனுரே"

என்று தீர்த்தப்பெருமையைக் குறிக்கின்றார்.

ஐயடிகள் காடவர்கோன்,

"கடுவடுத்த நீர்கொடுவா காடிதா என்று
நடுநடுத்து நாவடங்கா முன்னம்-பொடியடுத்த
பாழ்க்கோட்டஞ் சேராமுன் பன்மாடத் தென்குடந்
கீழ்க்கோட்டஞ் செப்பிக் கிட" [தைக்

என்ற வெண்பாவில் பாடியிருக்கிறார்.

இந்தக் கோயிலில் பல கல்வெட்டுக்கள் உள்ளன. அக் காலத்தில் இப்பதி உய்யக் கொண்டான் வளநாட்டு வடகரை பாம்பூர் நாட்டுக் திருக்குட மூக்கில் திருக்கீழ்க் கோட்டம் என்று வழங்கப்பட்டிருக்கிறது. கல்வெட்டுக்கள் சோழர், பாண்டியர் காலத்தவை. கி. பி. 10-ஆம் நூற்றாண்டு முதல் 13-ஆம் நூற்றாண்டு வரையுள்ளவை. முதற் பராந்தகன், கண்டராதித்தன், ஆதித்த கரிகாலன் (II), இராஜேந்திரன் (I), இராஜாதி ராஜன் (I), குலோத்துங்கன் (III), இராஜ ராஜன் (III), பாண்டியன் மாறன் சடையன் என்ற மன்னர்களின் காலத்தவை அவை. கோயிலுக்குத் திருப்பணிகள், பூமாலை, திருவமுது, விளக்கீடு, திருவாபரணங்கள், சிவயோகிகளுக்கு அமுதளித்தல் முதலியவற்றிற்காக நிலம், பொன், ஆடுகள் இவைகள் வழங்கிய செய்திகளை இக் கல்வெட்டுக்கள் அறிவிக்

கின்றன. மீமாம்சத்துள் ஒன்ருகிய பிரபாகரர் இயற்றிய பிரபாகரம் என்னும் நூலைப் போதிப்பதற்காக நிலம் விடப்பட்ட செய்தியைக் குறிக்கும் கல்வெட்டு மிகவும் முக்கியமானது. இக் கோயிலுக்குள் மடந்தை பாக நாயஞர், திருப்புறம்பயநாதர் சந்நிதிகள் இருந்ததாகவும் தெரிகிறது.

**காசி விசுவநாதர் கோயில் :**

இக் கோயில் மகாமகக் குளத்தின் வடபால் அமைந்திருக்கிறது. தேவாரப் பாடல் பெற்ற **திருக்குடந்தைக் காரோணம்** என்னும் தலம் இதுதான். திருஞான சம்பந்தர் ஒரு பதிகம் பாடியுள்ளார். 'குழகன் குடமூக்கில்... எந்தை காரோணத்தாரே' என்றும், 'குடந்தைக் குழகாரும்...காரோணத்தாரே' என்றும் பாடுகிருர். இப் பதிகம் சோமேசர் கோயிலைப் பற்றியதென்று கூறுவாருமுளர். நவநதிக்கன்னிகைகள் வந்து வழிபட்டது காசிவிசுவேசம் ஆனபடியாலும், அவர்கள் திருவுருவங்கள் இக் கோயிலிலுள்ளபடியாலும், கீழ்க் கோட்டத்தை வணங்கிய பின்னர் சம்பந்தர் காரோணம் சென்ருர் என்று சேக்கிழார் கூறுவதாலும் காசி விசுவநாதர் கோயிலே குடந்தைக்காரோணம் ஆகும். திருக்குடந்தைத் தலபுராணம் பாடிய மகாவித்துவான் மீனுட்சி சுந்தரம் பிள்ளையவர்களும் அப்படியே கொண்டார்கள்.

**சோமேசர் கோயில் :**

சாரங்கபாணி சுவாமி கோயிலுக்குத் தென்பால், பொற்ருமரைக் குளத்திற்குக் கிழக்கே இருக்கிறது. இறைவன் பெயர் சோமநாதர், சிக்கேசர் என்பது. தேவியின் பெயர் சோமசுந்தரி. வியாழன் வழிபட்டதால் வியாழச் சோமநாதர் என்ற பெயர் நாளடைவில் ஏழைச் சேர்மநாதர் என்று மருவி வழங்கி வருகிறது. இங்குள்ளது சோம தீர்த்தம். இக் கோயிலுக்குத் தனியே அருணகிரி நாதர் ஒரு திருப்புகழ்ப் பாடல் பாடியுள்ளார்.


கும்பகோணத்தில் மேற்சொன்ன கோயில்களே யன்றி பாணபுரீசர், கௌதமேசுவரர், அபிமுகேசுவரர், கண்பட்ட விசுவநாதர், கைலாய நாதர், ஏகாம்பரேசுவர், காளத்தீசுவரர், கரும்பாயிர விநாயகர், பிரமன் முதலியோர் கோயில்களும் இருக்கின்றன. காஞ்சி காமகோடி பீடமாகிய சங்கராச்சாரிய சுவாமிகளின் தலைமை மடம், வைணவக் கிளை மடங்கள், மத்வ-வியாசராயர் மடம், திருவாவடுதுறை, தருமபுரம், திருப்பனந்தாள், குன்றக்குடி முதலிய ஆதீனங்களின்கிளை மடங்கள், வீரசைவ-சாரங்கதேவர் மடம், மௌனசுவாமி மடம் முதலிய பல மடங்கள் கும்பகோணத்தில் இருக்கின்றன.

***

# திருஅக்னீஸ்வரஸ்வாமி தேவஸ்தானம், திருப்புகலூர்

## நன்னிலம் தாலூக்கா, தஞ்சை ஜில்லா

இராஜ்ய விவசாய அபிவிருத்தி கமிட்டியார் 24—11—58-ல் தஞ்சை ஜில்லா நன்னிலம் தாலூக்கா திருப்புகலூர் ஸ்ரீ அக்னீஸ்வரஸ்வாமி தேவஸ்தானத்தாரால் புறக்குடியில் அமைக்கப்பட்டுள்ள புஞ்சை அபிவிருத்திப் பண்ணையைப் பார்வையிட்டு தேவஸ்தான புஞ்சைத் திடலை அபிவிருத்திச் செய்து பல ஆயிரக் கணக்கான ரூபாய் வருமானமுள்ள சவுக்கும், தென்னையும் பயிரிடப் பட்டுள்ளதை பாராட்டினுர்கள். ஷை புஞ்சை அபிவிருத்திப் பண்ணையில் கமிட்டியின் தலைவர் திரு. ஏ. ஆர். வெங்கடாச்சாரியார் (ஓய்வு பெற்ற மராமத்து இலாக்கா தலைமை பொறியாளர்) அங்கத்தினர்கள் திரு. எம். ஜி. சங்கர், எம். எல். ஏ., திரு. பழனிச்சாமி கவுண்டர், எம்.எல்.ஸி., அவர்களும், காரியதரிசி திரு. என். வாசுதேவன் எம். ஏ. அவர்களும் தேவஸ்தான டிரஷரர் திரு. வி. எஸ். தீனதயாளு, பி. எஸ். வி. பி. எல் அவர்களும் இதர அதிகாரிகளும் தென்னம் பிள்ளைகளை நட்டார்கள்,



# திருவேரகம்

* * *

நிறைமதி முகமெனும் ஒளியாலே
நெறிவிழி கணைபுரி நிகராலே
உறவுகொள் மடவர்கள் உறவாமோ
உனதிரு வடியினி அருள்வாயே
மறைபயி லரிதிரு மருகோனே
மருவல ரசுரர்கள் குலகாலா
குறமகள் தனைமணம் அருள்வோனே
குருமலை மருவிய பெருமாளே

—அருணகிரிநாதர் திருப்புகழ்

திருவேரகம் என்பது முருகன் திருத்தலங்களில் ஒன்று; ஆறுபடை வீடுகளில் ஒன்றாகும் பெருமையையும் உடையது. கி. பி. இரண்டாம் நூற்றாண்டினதாகக் கருதப்படும் சிலப்பதிகாரத்தில் குன்றக் குரவையில் 'சீர்கெழு செந்திலும் செங்கோடும் வெண்குன்றும் ஏரகமும் நீங்கா இறைவன்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. டாக்டர் சுவாமிநாதய்யர் அவர்களின் சிலப்பதிகாரப் பதிப்பில் வெண்குன்றம் என்பதற்கு சுவாமிமலை என்று அரும்பத உரைகாரர் பொருள் கொண்டதாகக் காணப்படுகிறது. ஏரகம் ஏன்

தற்கு விளக்கம் காணவில்லை. நக்கீரர், திருமுருகாற்றுப்படையில் திருவேரகத்தைப்பற்றிக் கூறியிருக்கிறார். இந்நூலுக்கு உரைகண்ட நச்சினார்க்கினியர் 'ஏரகம் மலை நாட்டகத்ததோர் திருப்பதி' என்று கூறியிருக்கின்றனர். திருமுருகாற்றுப்படையில் 'புலராக்காழகம் புலரவுடீஇ' என்பதற்கு 'நீராடி நனைந்த உடையானது உடம்பிலே தோய்ந்து உலரும்படியாக உடுத்திக்கொண்டு முருகனை வழிபட்டனர்' என்ற பொருள்கொண்டு இவ்வழக்கம் மலைநாட்டில்தான் காணப்படுகின்றதென்கின்றனர். இவ்வாதாரங்களைக் கொண்டு திருவேரகம் என்பது நாகர்கோயிலுக்கருகிலுள்ள வேழிமலைக் குமரன்கோயில் என்று சிலரும், உடுப்பிக்கண்மையிலிருக்கும் உடுப்பி சுப்பிரமணியர்கோயில் என்று வேறு சிலரும் கூறுகின்றனர்.

கி.பி. 15-ஆம் நூற்றாண்டிலிருந்தவராகக் கருதப்படும் அருணகிரிநாதர் திருவேரகம் என்பது கும்பகோணத்திற்கருகிலுள்ள சுவாமிமலை என்று பல திருப்புகழ்ப் பாடல்களில் பாடியுள்ளார். அவர், 'நதியிற் காவிரியாற்றுக்குளே பயில் வளமைச் சோழ நன்னாட்டுக்குள் ஏரகநகர்' என்றும், 'காவேரி நேர்வடக்கிலே வாவிபூமணத்த காவார் சுவாமிவெற்பின் முருகோனே' என்றும், 'வளைகுலமலங்கு காவிரியின் வடபுறஞ் சுவாமி மலை மிசை விளங்கு தேவர்பெருமாளே' என்றும் கூறியிருக்கிறார். இதனால் சோழ நாட்டிலுள்ள காவிரிக்கு வடகரையிலுள்ள சுவாமிமலையென்பது பெறப்படுகிறது. ஏரகம் என்பது சுவாமிமலைதான் என்பதை 'ஏரக வெற்பெனும் அற்புத மிக்க சுவாமி மலைப்பதி' என்று விளக்கமாகவும் கூறியிருக்கிறார். ஆதலின் அருணகிரியார் காலமான கி.பி. 15-ஆம் நூற்றாண்டுக்குப்பின் ஏரகம் என்பது கும்பகோணத்துக்கருகில் காவிரிக்கு வடகரையில் உள்ள சுவாமிமலையே என்று எல்லோராலும் கொண்டாடப்பட்டு வருகிறது. சுவாமிமலைக்கு அண்மையிலுள்ள ஏரகரம் என்ற ஊரின் பெயரே இப்படி ஏரகம் என்று அமைந்திருக்கலாம் என்று சில ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். ஈர ஆடையுடன் சுவாமி தரிசனத்திற்குச் செல்லும் வழக்கம் சுவாமி மலையிலும் காணப்படுகிறது. சுவாமிமலைக்கு வழிபடச் செல்பவர்கள் காவிரியில் நீராடி, பெரும்பாலும் ஈர ஆடையுடன்தான் சுவாமிநாதனை வணங்கச் செல்கின்றனர்.

சுவாமிமலை என்னும் இப்பதி கும்பகோணத்திற்கு மேற்கே மூன்று கல்தொலைவில் காவிரியாற்றின் வடகரையில் இருக்கிறது. இதற்குத் திருவேரகம், சுவாமிமலை சுந்தராசலம், ஏரகவெற்பு, சுவாமிவெற்பு, தெற்குச்சற்குருவெற்பு, தாத்ரீகிரி, குருகிரி, குருமலை, வியாழகோத்ரம் என்ற பேர்கள் திருப்புகழ்ப் பாடல்களிலும் மற்ற நூல்களிலும் காணப்படுகின்றன. பிரணவ உபதேசம் கேட்ட பின்பு சிவபெருமான் முருகனை நோக்கி "நீதான் எலைக்கு சாமி; ஆதலால் இத்தலம் சாமி மலை என வழங்குக" என்று அருளியபடியால் சுவாமிமலை என்ற பெயர் உண்டாயிற்று. ஏர் + அகம் = ஏரகம் என்றால் அழகும் எழுச்சியும் உள்ள இடம் என்று பொருள். முருகப்பெருமான் ஒரு செய்குன்றின்மேல் எழுந்தருளியுள்ளார். சுவாமிநாதன், குருநாதன், தகப்பன் சாமி என்ற திருநாமங்கள் அவருக்கு வழங்குகின்றன.

கோயில் சந்நிதி கிழக்கு நோக்கியுள்ளது. அண்மையில் கோயிலுக்குப் பல திருப்பணிகள் நடைபெற்றுள்ளன. மூன்று கோபுரங்களில் கிழக்கிலும் மேற்கிலும் உள்ளவை மொட்டைக் கோபுரங்கள். காவிரியை நோக்கியிருக்கும் தெற்குக் கோபுரம்-இராஜகோபுரம் ஐந்து நிலைகளையுடையது. இக்கோபுர வாயில் வழியே உள்ளே சென்றதும் அழகிய திருக்கல்யாண மண்டபம் இருக்கின்றது; வண்ண ஓவியங்கள் தீட்டப்பெற்றிருக்கின்றன. கோயிலுக்கு மூன்று பிரகாரங்கள். முதல் பிரகாரம் மலையின் அடிவாரத்திலுள்ளது; இரண்டாவது மலை நடுவிலும், மூன்றும் பிரகாரம் மலையுச்சியிலும் இருக்கின்றன. முதல் பிரகாரத்தில் சுந்தரேசர், மீனாட்சியம்மை கோயில்கள் தனித் தனியே உள்ளன. கீழ்ப் பிரகாரத்திலிருந்து மேலே நடுப்பிரகாரத்திற்குச்செல்லப் படிகள் ஏறிச் செல்லவேண்டும். இங்குள்ள அறுபது படிகள் அறுபது ஆண்டுகளைக் குறிக்குமென்று 'வரு பிரபவ முதல் வருட தேவர்கள் திருவளர் அம்மலைச் செறிந்த பல்படி' என்று திருக்குடந்தைப் புராணம் கூறுகிறது. இரண்டாவது (நடு) பிரகாரத்தை வலம் வந்து இரண்டாவது படிக்கட்டுகள் வழியே மேலே செல்லவேண்டும். மேலே சென்றதும் கண்கொடுத்த விநாயகர் என்ற பேறு பிள்ளையார் காட்சியளிக்கிறார். கொங்குநாட்டுப் பிறவிக்குருடன் இவரை வழிபட்டுக் கண்ணொளி பெற்றான் என்ற செய்தி சொல்லப்படுகிறது. சுவாமிநாதர் திருமுன் மயிலுக்குப் பதிலாக யானை இருப்பது ஒரு தனிச் சிறப்பெனக் கூறப்படுகிறது

சிவபெருமானுக்கு இத்தலத்தே தான் முருகன் பிரணவ மந்திர உபதேசம் செய்ததாக வர



லாறு. ஆகையால் குருநாதன் என்று அழைக்கப் படுகிறான். இதை. 'அகமகிழ் வெய்தி அங்கண் தன்னிளங்குமரன் தன்னைத் தலைமையோடிருப்ப நல்கி, என்றும், ''தாரகத்துருவ மாந்தலைமை எய்திய ஏரகத்தறுமுருகன்' என்றும் கந்தபுராணம் கூறுகிறது. குமரகுருபரர், 'பொன்னங் கடுக் கைப்புரி சடையோன் போற்றிசைப்ப முன்னம் பிரமம் மொழிந்தோனே' என்று கந்தர் கலிவெண் பாவில் சொல்லியிருக்கிறார். 'முதுமா மறைக்குள் ஒருமா பொருட்கு மொழியே உரைத்த குருநாதா' என்றும், 'சிவனார் மனங்குளிர உபதேசமந்த்ர மிகு செவிமீதிலும் பகர்செய் குருநாதா' என்றும், இன்னும் இதுபோல் பல திருப்புகழ்ப் பாடல் களிலும் அருணகிரியார் பாடியிருக்கிறார். சுவாமி நாதனின் கம்பீரமான திருவுருவத்தோற்றம் கண் கவர் வனப்புடையது. இளைஞராகவும், மன்ன ராகவும், துறவியாகவும் அலங்கரிக்கப்பட்டு அளிக்கும் காட்சி கண்ணைவிட்டு நீங்காது.

வச்சிர தீர்த்தம், சரவண தீர்த்தம் இவை கோயிலுக்குள் இருக்கின்றன. குமாரதாரை என்பது காவிரியாற்றுத் தீர்த்தம். கீழ வீதியில் நேத்திர புஷ்பகரணி அல்லது சுவாமி புஷ்பகரணி என்னும் திருக்குளம் இருக்கிறது. சப்தரிஷி வாக்கியம் என்னும் சோதிட நூல் பரிகார காண் டத்தில் இந்த தீர்த்தத்தின் பெருமை கூறப்பட் டிருக்கிறது.

இத்தல விருட்சம் நெல்லிமரம்; மலைப்படிக் குக் கிழக்கு ஓரமாக இருக்கிறது. தைப்பூசம், பங்குனி உத்திரம், கார்த்திகைத் திங்கள்,சித்திரை மாதம் பெருவிழா நடைபெறும்.

இத்தலத்தைப்பற்றி முதன் முதலில் விரிவா கச்சொல்லப்பட்டது நக்கீரர் இயற்றிய திருமுரு காற்றுப்படையில்தான். 'பழங்குடிப் பிறப்பின ரான அந்தணர், நீராடி நனைந்த ஆடையுடன் வழிபடு காலம் அறிந்து, ஆறெழுத்து ஓதி, மணம் நிறைந்த பூக்களால் முருகனை அருச்சித்து, உச்சி மேற் கைகுவித்துப் போற்றி வாழ்த்துவார்கள்; அதற்கு மிக மகிழ்ந்து திருவேரகத்தில் முருகன் அமர்ந்தருளுவான்' என்ற பொருள்பட அந்நூலில் கூறப்பட்டிருக்கிறது. அருணகிரிநாதர், சுவாமி மலை என்ற பெயர் வரும் 15 பாடல்களையும், ஏர கம் என்ற பெயருடன் 19 பாடல்களையும், குரு மலை என்ற பெயர்குறிக்கும் 15 பாடல்களையும், குருகிரி என்று வரும் 3 பாடல்களையும், குரு வெற்பு, சுவாமி வெற்பு, தெற்குச்சற்குரு வெற்பு, வியாழகோத்ரம் என்ற பேருடன் ஒவ் வொரு பாடலும் ஆக 56 திருப்புகழ்ப் பாடல்கள் இத்தலத்தைப்பற்றி பாடியுள்ளார். தலபுராண மும், வேறு தனிப் பாடல்களும் இருக்கின்றன.

# காரைக்காலம்மையார்

தங்குபுகழ்க் காரைக்கால் வணிகன் மிக்க
தனதத்தன் தரும்புனித வதியார் மாவின்
செங்கனிகன் திருவருளா லழைப்பக் கண்டு
திகழ்கணவ னதிசயித்துத் தேச நீங்க
அங்கவுட லிழந்துமுடி நடையா லேறி
அம்மையே யெனநாதன் அப்பா என்று
பொங்குவட கயிலைபணிந் தாலங் காட்டிற்
புனிதனடம் அனவரதம் போற்றி னரே.

—திருத்தொண்டர் புராணசாரம்.

சோழநாட்டில் ஒரு கடற்கரைப் பட்டினம் காரைக்கால். அந்நகரில் பெரு வணிகனை தனதத்தன் என்பானுக்கு ஒரு அருந்தவப் புதல்வி தோன்றினர். புனிதவதியார் என்று பேரிட்டனர். வளர்ந்து மணப் பருவம் அடைந்தார். நாகபட்டினத்தைச் சேர்ந்த பரமதத்தனுக்கு வதுவை செய்து கொடுத்தனர். இருவரும் இல்லறம் இனிது நடாத்தினர். பரமதத்தனைக் காணவந்த சிலர் இரண்டு மாங்கனிகள் கொடுத்தார்கள். அவைகளை வீட்டுக்குக் கொடுத்தனுப்பினன். கறியமுது சமைக்கு முன் அடியார் ஒருவர் வர, புனிதவதியார் ஒரு மாங்கனியைக் கறியமுதுக்குப் பதிலாக வைத்து அவருக்கு உணவளித்தார். பின்னர் கணவன் வந்து உணவு கொள்ளும்போது மற்றொரு கனியை வைத்து உண்டி படைத்தார். கனியின் இனிமை கண்டு இன்னுமொரு பழத்தை வைக்கும்படி பரமதத்தன் கேட்டான். எடுப்பவர்போல் உட்சென்ற அம்மையார் ஆண்டவனை வேண்ட அவர் கையில் ஒரு மாங்கனி வந்தது. அதை நாயகனுக்குப் படைத்தார். அதன் தெவிட்டாத இனிமை கண்டு, மனைவியை நோக்கி 'முன் கொடுத்த கனி இது அன்று; இத்தகைய பழம் உலகிலேயே கிடைப்பதரிது; இதை எங்கே பெற்றாய்' என்று கேட்க, நிகழ்ந்ததை அம்மையார் கூறினர். 'அப்படியாயின் இன்னுமோர் கனி கொண்டுவா' என்றான். மனைவியார் அறைக்குள் நுழைந்து தம் உரை பொய்யாகாவண்ணம் ஈசனை நினைந்து வேண்டினர். வேண்டுவார் வேண்டியாங்கீயும் ஆண்டவன் கனியொன்று அருளினர். அம்மையார் அதைக் கணவன் கையில் கொடுக்க அது மறைந்தது. அச்சமடைந்த பரமதத்தன் மனைவி மானிடமல்ல, தெய்வமே என்று எண்ணி, சில நாளில் வேற்றூர்போய வாணிபம் செய்வதாகச் சொல்லி பாண்டிநாட்டில் ஒரு ஊருக்கேகினன். அங்கு ஒரு பெண்ணை மணந்து அங்கேயே வாழ்ந்து வருகையில் ஒரு பெண் மகவு அம்மனைவிக்குப் பிறந்தது. முதல் மனைவியின் நினைவாக அக்குழந்தைக்குப் புனிதவதி என்று பேரிட்டு வளர்த்தான். பாண்டிநாட்டில் இருப்பதை அறிந்த தனதத்தன் தன் மகளைச் சிலருடன் அங்கு அனுப்பி வைத்தான். பரமதத்தன், மனைவி குழந்தையுடன் வந்து அம்மையாரை வணங்கினன. அவன் கொள்கையை அறிந்த அம்மையார், அவனுக்காகத் தாங்கியிருந்த அழகிய தசைப்பொதி நீங்கிப் பேய் வடிவம் அடைய ஆண்டவனை வேண்டினர். அங்ஙனமே 'வானமும் மண்ணும் எல்லாம் வணங்கு பேய் வடிவமானர்.' எல்லோரும் அஞ்சி அகன்றனர். அம்மையார் **அற்புதத் திருவந்தாதி, திருஇரட்டை மணிமாலை** இறைவன் மேல் பாடியருளினர். பின்னர் கயிலை நோக்கிக் கடிது நடந்தார். மலையின் பாங்கர் அடைந்ததும் தலையால் நடந்து மேலே போனர். இதைப் பார்த்த உமையம்மை 'தலையினல் நடந்துவரும் எலும்பு உடலின் அன்பென்னே' என்ன, சிவபெருமான் 'இவள் நம்மைப் பேணும் அம்மைகாண்' என்று சொல்லி 'அம்மையே' என்ற செம்மைசால் மொழியால் அழைத்தார். அம்மையாரும் 'அப்பா' என்று சொல்லி வணங்கினர். ஆண்டவன் அவரை யாது வேண்டுமென்று கேட்க,

'இறவாத இன்ப அன்பு
வேண்டிப்பின் வேண்டுகின்ரூர்
பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்புண்டேல் உன்னை என்றும்

**மறவாமை வேண்டும் இன்னும்**
**வேண்டுநான் மகிழ்ந்துபாடி**
**அறவாநீ ஆடும்போதுன்**
**அடியின்கீழ் இருக்க என்றார்.'**

இறைவன் ஆணையிட்ட வண்ணம் திருவாலங் காட்டிற்குத் தலையாலேயே நடந்து வந்து சேர்ந்தார். ஆண்டவன் தாண்டவம் கண்டானந்தித்து **மூத்தத்திருப்பதிகம்** பாடி அருளினார். இறைவன் திருநடனத்து 'எடுத்தருளும் சேவடிக்கீழ் என்றுமிருக்கின்றார்.'

நாயன்மார்களின் வரலாறு கூறும் சேக்கிழார் பெரிய புராணத்தில் தனிப் புராணங்கொண்ட பெண்மணிகள் மூவர்; காரைக் காலம்மையார், மங்கையர்க்கரசியார், இசை ஞானியார் என்பவர். சுந்தரர் திருத்தொண்டத் தொகையில் காரைக்கால் அம்மையாரை 'பேயார்க்கும் அடியேன்' என்று பரவினார். அம்மையார் அருளிய மூத்த திருப்பதிகத்திலும், அற்புதத் திருவந்தாதியிலும் தன்னை **காரைக்காற்பேய்** என்றே சொல்லிக் கொள்கிறார். சுந்தரர் அதை வைத்தே 'பேயார்க்கும் அடியேன்' என்றனர். ஆனால் சேக்கிழார் 'காரைக்காலம்மையார்' என்ற தலைப்புக் கொடுத்து 66 பாடல்களில் அவர் வரலாற்றைக் கூறுகிறார். மங்கையர்க்கரசியார், இசை ஞானியார், திலகவதியார் இவர்களை இயற்பெயர்களைக் கொண்டே குறித்த சேக்கிழார் அம்மையாரின் இயற்பெயரான புனிதவதியார் என்பதைப் புராணத்தின் தலைப்பாக அமைக்கவில்லை. காரணம், இறைவன் 'அம்மையே' என்று இவரை அழைத்ததுதான். அம்மை அப்பன் இல்லாத ஆண்டவன் இவரையே 'அம்மை' என்று விளித்த பெருமையின் அருமை கண்டின்புறத் தக்கது. சேக்கிழார் அதை எடுத்துக் கையாண்ட முறை பெரிதும் போற்றத் தக்கது.

இன்னும் அம்மையாரை 'பொங்கிய பேரழகுமிகுப் புனிதவதியார்', 'அழகின் கொழுந்து', 'மானிளம்பிணை போல் நின்ற மனைவியார்', 'தாமரைத் தவிசில் வைகும் தனித்திரு', 'திருவனையார்', 'அன்னமனையார்' என்றெல்லாம் புகழ்ந்து பேசுகிறார். பொதுவாக எல்லா நாயன்மார் வரலாறுகளை முடிக்கும்போது சிவபெருமான் திருவடி நீழலை அடைந்தார் என்று கூறும் சேக்கிழார் அம்மையார் சரித முடிவில் ''தாண்டவத்தில் அவர் எடுத்தருளும் சேவடிக்கீழ் என்றும் இருக்கின்றார்'' என்று நிகழ் காலத்தில் கூறியிருப்பது பெருஞ் சிறப்புடையது.

தேவாரம் பாடிய மூவர்களுக்கும் முன்பு இருந்தவர் அம்மையார் என்பது தெளிவு. அம்மையார் திருவாலங்காட்டில் தலையால் நடந்ததால் அப்பதியை மூவர்களும் மிதியாது சென்றனர். மூவர்களுக்கும் இரண்டு, மூன்று நூற்றாண்டுகள் முன் அம்மையார் இருந்திருக்கலாம். அம்மையார் அருளிய பாடல்களின் தமிழ்ப் போக்கை நோக்குமிடத்து அவர் காலத்தைக் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டாகக் கொள்ளலாம் என்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். இவருடைய பாடல்கள் பதினோராந் திருமுறையில் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

அம்மையார், மூத்த திருப்பதிகங்கள் இரண்டில் 22 பாடல்களையும், திரு இரட்டை மணிமாலையில் 20 செய்யுட்களையும், அற்புதத் திருவந்தாதியில் 101 வெண்பாக்களையும் அருளியிருக்கின்றார். மூத்த திருப்பதிகத்தில் சுடுகாட்டின் பயங்கரத் தோற்றமும், பேய்கள் பிணந்தின்று ஆடுவதும், ஆந்தை குழறுவதும், கோட்டான் குமுறுவதும், நரி ஊளையிடுவதும், இறைவன் நள்ளிருளில்நட்டம் பயில்வதும் அழகுபடக் கூறியிருக்கின்றார். ஒரு பாடலில் ஏழு இசைகளையும், பல இசைக் கருவிகளையும் அமைத்துப் பாடியிருக்கின்றார். அற்புதத் திருவந்தாதியில் பல சைவ சித்தாந்தக் கருத்துக்கள் செறிந்திருக்கின்றன. அம்மையார் பாடல்களில் உள்ள இயற்கை வர்ணனையும், ஆண்டவன் உருவ அருவ அருவுருவ இயல்களும், திருவருட் திறமும், தத்துவ நுட்பமும் திருவருட் செந்நெறியினர்க்கும், தத்துவ ஆராய்ச்சியாளர்க்கும் பெருவிருந்தளிப்பன. அவருடைய பாடல்களின் தெள்ளிய நடையை யாவரும் எளிதின் உணர்ந்து கொள்ளலாம். பூத உடல் என்னும் பிரகிருதி மாயாப் பருஉடலை உதறி, நுண்ணுடல் என்னும் ஞான உடலைப் பெற்றமையை அம்மையார் பேய் என்று கூறினார்.

**அறிவானுந் தானே அறிவிப்பான் தானே**
**அறிவாய் அறிகின்றான் தானே—அறிகின்ற**
**மெய்ப்பொருளுந் தானே விரிசுடர்பார் ஆகாசம்**
**அப்பொருளுந் தானே அவன்**

—அற்புதத் திருவந்தாதி

# அறநிலையங்களில் பால் பண்ணைகள்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

## அட்டவணை 2

**20.** கால் நடைகள் உள்ள பண்ணை

தொடர்ந்து வராத செலவு

i. 14 கறவை ரூ.900 விதம், 6 கறவையில்லாதவை ரூ. 650 விதம், பொலி காளை ஒன்று ரூ. 1000 ரூ. 17500

ii. பசுக்களுக்கு தொழுவம் தொட்டி சரக்கறை முதலியன ரூ. 10,000

iii. பால் கறக்கும் அளக்கும் படி வகையராக்கள் ரூ. 350

vi. மேஜை நாற்காலி, இதர சாமான்கள் ரூ. 250

ரூ. 28,100

தொடர்ந்து வரும் செலவு:

i. அலுவலர் பண்ணை பாதுகாப்பாளர் 60—3—150—பஞ்சப்படி ரூ. 22 ரூ. 984

14 கறவை கால் நடைகளுக்கு நாள் ஒன்றுக்கு தலைக்கு ரூ. 1-8-0 விதம் தீனிச் செலவு ரூ. 7664

6 கறவையில்லாத கால் நடைகளுக்கு நாள் 1-க்கு தலைக்கு 8 அணா விதம் தீனிச் செலவு ரூ. 1094

டை 10 கன்றுகள் தலைக்கு 6 அணா விதம் ரூ. 1363

iii. மருந்து, தண்ணீர் வசதி முதலியன ரூ. 350

iv. பால் கறப்பவன் ரூ. 35 2 வேலையாட்கள் ரூ. 30 விதம் ரூ. 1140

v. பொலி எருது பராமரிப்புச் செலவு ரூ. 540

ரூ. 13135

அல்லது 13150

வருவாய்

i. நாளொன்றுக்கு பவுண்டு 4 அணா விதம் பசு ஒன்றுக்கு 12 பவுண்டு பாலாக ஒரு வருஷத்திற்கு விலை மதிப்பு ரூ. 15330

ii. 7 ஆண் கன்றுகள் ரூ. 200 விதம் விலை மதிப்பு ரூ. 1400

iii. சாணத்தின் மதிப்பு ரூ. 120

iv. பொலிகாளை மூலம் வரவு ரூ. 500

ரூ. 17350

## அட்டவணை 3

**500** கால் நடைகள் உள்ள பண்ணை.

தொடர்ந்து வராத செலவு

i. 35 கறவை பசுக்கள் ரூ. 900 விதம், 15 கறவையில்லாதவை ரூ. 650 விதம், 1 பொலி காளை ரூ. 1000 ரூ. 42250

ii. கொட்டகை, தஸ்தாவேஜு அறை, சரக்கறை, தண்ணீர்த் தொட்டிகள் ரூ. 20000

iii. நாற்காலிகள், வாளிகள், பால்கறக்கும் பாத்திரங்கள், தீனி வைக்கும் பெட்டிகள் ரூ. 1000

iv. மேஜை, நாற்காலி, இதர சில்லரை சாமான்கள் ரூ. 500

ரூ. 63,750

தொடர்ந்து வரும் செலவு:

I. அலுவலர்.

(i) கால்நடை மருத்துவர் 150—5—200—10—300 பஞ்சப்படி ரூ. 34 ரூ. 2208

(ii) பால் கணக்கு வைத்திருப்பவர் 35—1—60 பஞ்சப்படி ரூ. 19. ரூ. 648

2856

II. தீனிச்செலவு :

i. 35 கறவை பசுக்களுக்கு நாள் ஒன்றுக்கு தலைக்கு ரூ. 1-8-0 வீதம் ரூ. 19163

ii. 15 கறவையில்லாத கால் நடைக்கு நாளொன்றுக்கு தலைக்கு 8 அணு வீதம் ரூ. 2738

25 கன்றுகளுக்கு தலைக்கு தினம் அணு 6 வீதம் ரூ. 7528

ரூ. 29429

III. மருந்து, தண்ணீர் வசதி, விளக்கு முதலியன ரூ. 750

IV. பால் கறப்பவர் மூன்று பேர் ரூ. 35 வீதம் 2 வேலையாட்கள் ரூ. 30 வீதம் கன்றுகுட்டிகளை காக்கும் பையன் ஒருவன் ரூ. 20 ரூ. 2220

V. பொலிகாளைச் செலவு ரூ. 540

ரூ. 35795

அல்லது ரூ. 36000

வரவு :

I. 35 பால் கறவைகளிடம் 12 பவுண்டு வீதம் பால் மொத்த விலை மதிப்பு 1 வருஷத்துக்கு ரூ. 38325

II- 15 கன்றுகளின் விலை ரூ. 200 வீதம் ரூ. 3000

III. சாணத்தின் மதிப்பு ரூ. 300

IV. பொலிகாளை மூலம் வரவு ரூ. 500

ரூ. 42,125

அல்லது ரூ. 42,000

## திருப்புகலூர் தேவஸ்தான புஞ்சை அபிவிருத்திப்பண்ணை

தஞ்சை ஜில்லா நன்னிலம் தாலூக்கா திருப்புகலூர் ஸ்ரீ அக்னீஸ்வரஸ்வாமி தேவஸ்தானத்தில் பல வருஷங்களாக தரிசாகக்கிடந்த புறக்குடி புஞ்சையைச் சீர்செய்து சுமார் **2** லக்ஷம் சவுக்கு கன்றுகளும், **1000** தென்னம் பிள்ளைகளும், மா, பலா போன்ற பழ வகை மரங்களும் பயிரிடப்பட்டுள்ளது. இப்பணியை அற நிலைய பாதுகாப்பு ஆணையர் உயர்திரு ஏ. உத்தண்டராம பிள்ளை, ஐ. ஏ. எஸ். அவர்கள் **11-5-58**-ல் ஆரம்பித்து வைத்தார்கள்.

இந்த புஞ்சை அபிவிருத்திப் பண்ணையில் **20-8-58**-ல் நமது இராஜ்ய உள் விவகார அற நிலைய பாதுகாப்பு இலாகா அமைச்சர் கனம் எம். பக்தவத்ஸலம் அவர்கள் தலைமையில் வனமகோற்சவம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அடிஷனல் டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட் திரு. டையாஸ், அறநிலையப் பாதுகாப்பு இலாக்கா துறை துணை ஆணையர் திரு. ஏ. சக்கரை சேர்வை, சப் கலெக்டர் ஸ்ரீ என். பஞ்சாபகேசன் ஐ. ஏ. எஸ்., சுவாமிமலை நிர்வாக டிரஸ்டி திரு. எஸ். இராமாமிருத உடையார், திருவாரூர் நகரசபைத் தலைவர் திரு. [illegible]பி. சாம்பசிவம், தேவஸ்தான மானேஜிங் டிரஸ்டி திரு. எம். டி. தியாகராஜப் பிள்ளை எம். எல். ஏ., தேவஸ்தான டிரஷரர் திரு. ஸி. எஸ். தீனதயாளு, பி. எஸ்ஸி. பி. எல். இதர அதிகாரிகளும் முக்கியஸ்தர்களும் **1001** தென்னம் பிள்ளைகளை நட்டார்கள்.

# முதலாழ்வார் மூவர்

வைணவத் திருநெறித் தலைவர்கள் பன்னிருவர் என்பதை

" வையம் புகழ் பொய்கைபேய்
பூதன்மாறன் மதுரகவி
ஐயன் மழிசைமன் கோழியர்
கோனருட் பாண்பெருமாள்
மெய்யன்பர் காற்பொடி
விண்டுசித்தன் வியன்கோதை வெற்றி
நெய்யங்கை வேற்கலியன்
தமிழ்வேதம் நிலைநிற்கவே "

என்ற பாடல் அறிவிக்கிறது. ஆழ்வார்கள் வரிசையைப் பல ஆசிரியர்கள் பலவாறு தொகுத்துரைத்திருக்கின்றனர். என்றாலும், பொய்கை யாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் என்ற மூவரும் முதலிலே வைக்கப்பட்டிருக்கின்றனர். காலத்தாலும் மற்ற ஆழ்வார்களுக்கு முற்பட்டவர்கள் என்பதை எல்லோரும் ஒப்புக் கொண்டது. ஆழ்வார்கள் உலகில் அவதரித்த முறையை அடியில் வரும் பாடலில் காணலாம்:—

" பொய்கையார் பூதத்தார்
பேயார் புகழ்மழிசை
அய்யன் அருண்மாறன்
சேரலர்கோன்—துய்யபட்ட
நாதனன்பர் தாட்டூளி
நற்பாணன் நற்கலியன்
ஈதிவர் தோற்
றத்தடைவாம் இங்கு "

'மாறன்' என்பதில் மதுரகவியார் வரலாறும், 'பட்டநாதன்' என்பதில் ஆண்டாள் வரலாறும் அடங்குதலின் மேற்கண்ட பாட்டில் வேருகக் கூறப்பட்டிலர். முதலாழ்வார் மூவரும் தொண்டை நாட்டில் அவதரித்தவர். ஒரே ஆண்டில், ஒரே மாதத்தில், ஒரே பட்சத்தில் தொடர்ந்து மூன்று நட்சத்திரங்கள், கிழமைகள், திதிகள் இவைகளில் பிறந்தவர்கள். மூவாயிரப்படி குருபரம்பரையில், இவர்கள் துவாபரயுகம் 862901 (கி. மு. 4202) சித்தார்த்தி ஆண்டு, ஐப்பசி மாதம் சுக்கில பட்சத்தில் அவதரித்தார்கள் என்று கூறப்பட்டிருக்கிறது.

## பொய்கையாழ்வார்

" கைதைசேர் பூம்பொழில்சூழ்
கச்சிநகர் வந்துதித்த
பொய்கைப் பிரான்கவிஞர்
போரேறு—வையத்(து)
அடியவர்கள் வாழ
அருந் தமிழந்தாதி
படிவிளங்கச் செய்தான் பரிந்து "

அருந்தமிழ் மூதாட்டியான ஔவைப் பிராட்டி, 'தெண்ணீர் வயல் தொண்டை நன்னாடு சான்றோர் உடைத்து' என்று பாடினர். அத் தொண்டை நாட்டில் மிகச் சிறந்தது காஞ்சிபுரம். 'முத்திதரு நகரேழில் முக்கிய மாம் கச்சி' என்பர். அந்நகரில் திரு வெஃகா என்பது ஒரு வைணவத் திருப்பதி. அங்குள்ள பொய்கையிலுள்ள தாமரை மலர்களுள் ஒன்றில் இவர் அவதரித்தார். ஆகலின் பொய்கையாழ்வார் என்னும் திருநாமம் சூட்டப் பெற்றார். கச்சியைச் சூழ்ந்துள்ள நாடு பொய்கை நாடு என்னும் பேருடைத்து ஆதலால் அப்பெயர் பெற்றார் என்று கூறுவாரு முளர். இவர் இளமையிலேயே உலக வாழ்க்கையை வெறுத்து எம்பெருமானிடம் நீங்காதபற்றுடையவராகத் திகழ்ந்தார்.

'அன்பாழி யானை யணுகென்னும்
நாஅவன்தன்
பண்பாழித் தோள்பரவி
யேத்தென்னும்—முன்பூழி
காணானைக் காணென்னும்
கண்செவிகே ளென்னும்
பூணாரம் பூண்டான்
புகழ்'

என்ற இவருடைய பாசுரம் படித்தின்புறத் தக்கது. இவர் ஐப்பசி மாதம் சுக்கில பட்சத்தில் அஷ்டமி—திருவோண நட்சத்திரத்தில் திருமாமகள் நாதனுடைய ஐம்படைகளில் ஒன்ருன பாஞ்சசந்நியம் என்ற திருச்சங்கின் அமிசம் உடையாராய் அவதரித்தார் என்பர்.

## பூதத்தாழ்வார்

"என்பிறவி தீரஇறைஞ்சினேன் இன்னமுதா
அன்பே தகளி அளித்தவராம்—நன்புகழ்சேர்
சீதத்தார் முத்துக்கள் சேரும் கடன்மல்லைப்
பூதத்தார் பொன்னங் கழல்"

தொண்டை மண்டலத்தில் கடன்மல்லை என்பது ஒரு கடற்கரைப்பட்டினம். இப்போது மகாபலிபுரம், மாமல்லபுரம் என்று வழங்குகிறது. 'கச்சிக்கிடந்தவனூர் கடல்மல்லைத் தலசயனம்' என்று பாடப் பெற்றது. இப்பதியிலே குருக்கத்தி மலரிலே பூதத்தாழ்வார் அவதரித்தார் என்று ஆன்ருேர் கூறுவர். உலக வாழ்க்கையில் அவர் மனம் சிறிதும் ஈடுபடவில்லை. இந்த நிலையை,

"மண்ணுலக மாளேனே வானவர்க்கும் வானவனய்
விண்ணுலகம் தன்னகத்து மேவேனே--நண்ணித்
திருமாலைச் செங்கணெடியானை எங்கள்
பெருமானைக் கைதொழுதபின் "

என்ற அவர் பாடல் விளக்கும். 'மறுத்திரு மார்பனவன் பூதம்', 'கடல்வண்ணன் பூதம்' என்றவாறு எம்பெருமானை அறிதலாலே இவருக்குப் பூதத்தாழ்வார் என்ற திருநாமம் ஏற்பட்டதென்பர். இவர் ஐப்பசி மாதம் சுக்கில பட்சம் நவமி, அவிட்ட ஓரையில் திருமாலின் கௌமோதகி என்னும் கதாயுதத்தின் அம்சமாக அவரித்தனர் என்பர்.

## பேயாழ்வார்

"சீராரு மாடத் திருக்கோவ லூரதனுட்
காரார் கருமுகிலைத் காணப்புக்-கோராத்
திருக்கண்டேன் என்றுரைத்த சீரான் கழலே
உரைக்கண்டாய் நெஞ்சே யுகந்து"

'ஆருேடிரெட்டுத் தொண்டை' என்றபடி, மங்களாசாசனம் பெற்ற திவ்விய தேசங்களில், இருபத்திரண்டு பதிகள் தொண்டை நாட்டிலுள்ளன. 'ஒப்பரில்லா மாதர்கள் வாழும் மாடமா மயிலைத் திருவல்லிக்கேணி' என்றும், 'தேனமர்சோலை மாடமா மயிலைத் திருவல்லிக்கேணி' என்றும், திருவல்லிக்கேணியுடன் புகழ்ந்து பாடப்பெற்ற பதி திருமயிலை என்பது. இங்குள்ள ஆதிகேசவப்பெருமாள் கோயில் கிணற்றிலே செவ்வல்லி மலரிலே பேயாழ்வார் திரு அவதாரம் செய்தார் என்பர் பெரியோர். இவர் பகவத் பக்தியால் பரவசப்பட்டு ஆடுதல், பாடுதல், அழுதல், சிரித்தல், தொழுதல், மகிழ்தல் முதலிய தொழில்களையே செய்து கொண்டிருப்பர். 'அழுவன் தொழுவன் ஆடிக் காண்பன் பாடியலற்றுவன்', 'காலாழும் நெஞ்சழியும், கண் சுழலும்' என்கிறபடி பித்தேறிவனரா யிருக்கையிலே பார்ப்பவர்க்குப் பேய்போல் தோன்றினமையின் இவர்க்குப் பேயாழ்வார் என்ற திருப்பெயருண்டாயிற்றென்பர். இவர், ஐப்பசி சுக்கிலபட்ச தசமியில் சதய தாரகை கூடிய நன்னளில் எம்பெருமானின் நந்தகம் எனப்படும் வாள்படையின் அமிசமாக அவதரித்தார் என்பர். இவர் அருளிய பாசுரங்கள் பக்திரசம் மிக்கவை. இவர் மனம் திருமாலின் திருவடிகளில் சென்று பொருந்தி நிலைத்து விட்டது.

" காண் காணென விரும்பும் கண்கள், கதிரிலகு
பூண்டார கலத்தான் பொன்மேனி-பாண்கட்
டொழில்பாடி வண்டறையும் தொங்கலான்
செம்பொற்
கழல்பாடி யாம் தொழுதும் கை"

என்பது இவருடைய பாசுரங்களின் ஒன்று.

முதலாழ்வார் மூவரும் உலக இன்பத்தை வெறுத்து திருமாலின் திருவடிகளில் சிந்தையைப் பதித்து, மக்களுடன் அதிக தொடர்பில்லாமல் ஒருவரை யொருவர் அறியாமல் ஒரு நாள் இருந்த ஊரில் மறுநாள் இல்லாமல் சஞ்சரித்துக் கொண்டிருந்தனர். இவர்களுடைய பக்தி, ஞானம் இவைகளை உலகினர்க் குணர்த்த திருமாமகள்நாதன் திருவுளங்கொண்டு மூவரும் திருக்கோவலூருக்குச் செல்லவேண்டும் என்ற எண்ணத்தை உண்டாக்கி யருளினன். அவ்வாறே சென்ற மூவரும் திருக்கோவலூரில் தனித் தனியே எம்பெருமானைச் சேவை சாதித்தார்

கள். பொழுதுபோய்விட்டது. பொய்கையார் ஒரு வீட்டின் இடைகழியில் சென்று படுத்தார். பூதத்தாரும் அதே வீட்டிற்கு வந்து 'இடம் கிடைக்குமோ' என, 'ஒருவர் படுக்க, இருவர் இருக்க இந்த இடைகழி இடம் தரும்' என்று பொய்கையார் சொல்ல இருவரும் இருந்தனர். அப்போது பேயாரும் அங்கு வந்து 'அடியேனுக்குப் படுக்க இடம் கிடைக்குமோ' என்று உசாவினார். பொய்கையார், 'இவ்விடைகழியில் ஒருவர் படுக்க, இருவர் இருக்க, மூவர் நிற்க இடமுண்டு' என்று சொல்ல மூவரும் நின்றுகொண்டு ஒருவரையொருவர் அறிந்து, பகவத் குணங்களைச் சொல்லுதலும் கேட்டலும் செய்து மகிழ்ந்திருந்தனர். அவ்வளவில் திருமாமகள்நாதன் பேரிருளையும், பெருமழையும் உண்டாக்குவித்து இடைகழியில் உருக்காட்டாமல் உட்புகுந்து பொறுக்க வொண்ணாத மிக்க நெருக்கத்தைச் செய்தருளினன். மூவரும் தம்மையொழிய அங்கு வேறொருவர் இருந்து நெருக்கத்தைச் செய்யும் காரணத்தைக் கண்டறிய எண்ணினர்; அகக்கண்கொண்டு பார்த்தனர். அப்போது, திருமகள் திருமார்பிற் பொலிய, இறைவன் கருடன்மீது இவர்ந்து வந்து மூவருக்கும் காட்சி யருளினன். மூவரும் அடைந்த ஆனந்தம் உள்ளடங்கவில்லை. பொய்கையார்,

'வையந் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காகச்—செய்ய
சுடராழியானடிக்கே சூட்டினேன் சொன்மாலை
இடராழி நீங்குகவே என்று'

என்று தொடங்கி நூறு பாடல்களைப் பாடினர். பிறகு பூதத்தார்,

'அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை இடுதிரியா—நன்புருகி
ஞானச்சுடர் விளக்கேற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ் புரிந்த நான்'

என்று தொடங்கி நூறு பாசுரங்களை இசைத்தருளினர். பின்பு பேயார்,

'திருக்கண்டேன் பொன்மேனி
கண்டேன் திகழும்
அருக்கன் அணிநிறமுங்
கண்டேன்—செருக்கிளரும்
பொன்னாழி கண்டேன்புரி
சங்கங்கைக் கண்டேன்
என்னாழி வண்ணன்பால்
இன்று'

என்று தொடங்கும் பாடலுடன் நூறு பாக்களைச் செய்தருளினர். இத்திருக்கோவலூர் நிகழ்ச்சியை,

'நீயும் திருமகளும் நின்றாயால் குன்றெடுத்துப்
பாயும் பனிமறைத்த பண்பாளா—வாசல்
கடைகழியா உள்புகாக் காமர் பூங்கோவல்
இடை கழியே பற்றியினி'

என்று பொய்கை யாழ்வார் குறித்திருக்கின்றனர்.

இம்மூவரும் அருளிய பாசுரங்களை நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில், மூன்றாவது ஆயிரத்தில் முதல், இரண்டு, மூன்றாந் திருவந்தாதிகள் என்ற முறையில் அமைத்திருக்கின்றனர். வைணவ சம்பிரதாய நூல்களில் இவர்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தவராகச் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆராய்ச்சியாளர்கள் கி. பி. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து எட்டாம் நூற்றாண்டுக்கும், அல்லது கி. பி. ஐந்தாம் நூற்றாண்டுக்கும் பத்தாம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் இம்மூவரும் வாழ்ந்திருக்க வேண்டுமென்று கருதுகின்றார்கள். சிலர், இவர்களின் வெண்பாக்களின் சொல் நடையை நோக்குமிடத்து புறப்பொருள் வெண்பாமாலை இயற்றப்பெற்ற கி. பி. எட்டாம் நூற்றாண்டில் இவர்கள் பாடல் எழுந்தனவென்று கொள்ளலாம் என்று கூறுகின்றனர். எவ்வாறாயினும் இம்மூவரும் மற்ற ஆழ்வார்கள் காலத்துக்கு முற்பட்டவர் என்பதில் ஒருவருக்கும் கருத்து வேறுபாடில்லை. இவர்கள் திருமாமகள் நாதனிடம் நீங்காத அழுந்திய பேரன்பு உடையவர்கள் ஆயினும் சமரசஞானம் உடையவர்கள். எடுத்துக் காட்டாக,

'அரன்நா ரணன் நாமம்; ஆன்விடை புள்ஊர்தி;
உரைநூல் மறை; உறையும் கோயில்-வரைநீர்;
கருமம் அழிப்பு அளிப்புக் கையதுவேல் நேமி;
உருவம் எரி கார்மேனி ஒன்று,

என்பதில் பொய்கையார், அரனையும் அரி

## பாவை மாநாடுகள்

அறநிலையத் துறை ஆணையாளர் திரு A. உத்தண்டராமன் I.A.S. அவர்கள் கீழ்க் காணும் ஊர்களில் நடந்த திருவெம்பாவை திருப்பாவை மாநாடுகளிலும், பிற நிகழ்ச்சிகளிலும் கலந்துகொண்டார்கள் :—

**9—1—59** : **தேரழுந்தூர்** (திருவழுந்தூர்) ஆமருவியப்பன் கோவில்-மாநாடு.

**திருஇந்தளூர்** (திருவிழுந்தூர்)—பரிமள அரங்கநாதர் கோயில் மாநாடு.

**வைத்தீசுவரன்கோயில்** : மாநாடு; நூல் நிலையமும், பசுமடமும் திறந்து வைக்கப்பட்டன.

**திருமயிலாடி** : மாநாடு; நூல் நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

**சீர்காழி** : மாநாடு பசுமடம் பார்வையிட்டு, பசுக்களுக்கு பெயர் கொடுக்கப்பட்டது.

**10—1—59** : **வழுவூர்**-மாநாடு

**திருச்செங்காட்டங்குடி** : நூல் நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

**திருக்கண்ணபுரம்** : மாநாடு.

**திருப்புகலூர்** : மாநாடு; காந்தி பிரயாணிகள் விடுதி திறந்து வைக்கப்பட்டது.

**அந்தனப்பேட்டை** : மாநாடு; நந்தவனம் திறந்து வைக்கப்பட்டது.

**நாகப்பட்டினம்** : மாநாடு; கோரத நிலையம் திறந்து வைக்கப்பட்டது,

**11—1—59** : **திருவலிவலம்**: மாநாடு; நூல் நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

**நாச்சியார் கோயில்** : மாநாடு

**திருவிடைமருதூர்** : மாநாடு; தேவாரத் திருப்பதிகக் கல்லெழுத்துக்கள், நால்வர் உருவங்கள், நூல் நிலையம் திறந்து வைக்கப்பட்டன.

**கும்பகோணம்** : சாரங்கபாணி கோயில்; மாநாடு.

**12—1—59** : **திருவையாறு; மாத்தூர்** :— மாநாடுகள்.

**தண்டாங்கோரை** : (தண்டங்குறை) திருப்பணி துவக்கவிழா; அறநிலைய ஆணையர் பயன்படுத்திய வெள்ளிக் கரணையை ரூ. 505-க்கு திரு. கல்யாண சுந்தரமய்யர் வாங்கிக் கொண்டார்.

**அம்மாபேட்டை** : மாநாடு

**பாமணி** : மாநாடு; திருப்பதிகக் கல்வெட்டுத் திறந்து வைக்கப்பட்டது.

**மன்னார்குடி** : இராஜகோபால் சாமி கோயிலில் மாநாடு.

**12—1—59** : இரவு - திருவிடைமருதூரில் 63 நாயன்மார்களையும், 9 தொகையடியார்களையும் புதிதாகச் செய்யப்பட்ட 38 கேடயங்களில் எழுந்தருளச் செய்து வீதி வலம் நடந்தது. முன்னால் விநாயகரும் பின்னால் சண்டேசுரரும் எழுந்தருளினார்கள். நாதசுவர வித்துவான் திரு. P. S. வீருசாமிப் பிள்ளையவர்களும், இன்னும் பல நாதசுவர வித்துவான்களும் திருவீதி வலத்தில் நாதசுவரம் இசைத்தார்கள். ஏராளமான மக்கள் திரண்டு வந்து கண்டு மகிழ்ந்தனர். அறநிலைய ஆணையர் இவ் வீதிவலத்தில் கலந்து கொண்டார். நாயன்மார் வீதி விழாவினை மிகச் சிறந்த முறையில் திருவாவடுதுறை ஆதீன கர்த்தரவர்கள் நடத்தி வைத்தார்கள்.

---

யையும் ஒன்றுபடுத்திக் கூறியிருக்கிறார். பேயாழ்வார்,

‘தாழ்சடையும் நீள்முடியும் ஒண்மழுவும்
சக்கரமும்
சூழ்அரவும் பொன்னாணும் தோன்றுமால்-சூழும்
திரண்டருவி பாயும் திருமலைமேல் எந்தைக்கு
இரண்டுருவும் ஒன்றாய் இசைந்து’

என்ற பாசுரத்தில் அரன் அரி என்ற இரண்டு வடிவும் ஒரு சேர விளங்குகின்ற காட்சியாய்ப் பாடியருளியுள்ளார். இவர்கள், பொய்கையார், பூதனார், பேயனார் என்ற சங்கப்புலவர்களாக இருக்கலாம் என்று சிலர் கருதுகின்றனர். உலகப்பிரவிர்த்தியில் மனம் செல்லாத இவ் வாழ்வார்கள், பொய்கையார் என்ற சங்கப் புலவர் அரச நட்புரிமை கொண்டவராக வரலாறு கூறுகின்றமையால், சங்கப் புலவர்களாக இருக்க முடியாது என்று வேறு சிலர் கருதுகின்றனர்.

# இராமலிங்க அடிகள்

"அருள் பழுத்த செழுங்கனியே அகம்பழுத்த
சிவஞான அமுதே முத்திப்
பொருள்பழுத்த அருட்பாவை எமக்களித்த
தெய்வமணப் பூவே என்றும்
மருள்பழுத்த அடியேங்கள் மனஇருளை
அகற்றவரு மணியே மெய்ம்மைத்
தெருள்பழுத்த வடலூர்வாழ் இராமலிங்க
நின்னருளைச் சிந்திப்பேனே."

தென்னார்க்காடு மாவட்டத்தில் சிதம்பரத்திற்கருகிலுள்ளது மருதூர் என்னும் சிற்றூர். அங்கு கருணீகர் குலத்தினரான இராமையாப் பிள்ளை என்ற ஒருவர் இருந்தார். அவர் மணந்த மனைவியர் ஒருவர்பின் ஒருவராக ஐவர் இறைவன் திருவடி அடைந்தனர். பொன்னேரி சின்னம்மை என்பவரை ஆறுவது மனைவியாக வாய்க்கப் பெற்றார். அவர்களுக்கு இரண்டு ஆண் பிள்ளைகளும் இரண்டு பெண் பிள்ளைகளும் பிறந்தனர். அவர்களுக்கு சபாபதி, பரசுராமன், சுந்தரத்தம்மாள், உண்ணுமுலையம்மாள் என்று பெயர். சுபானு ஆண்டு, புரட்டாசித் திங்கள் 21-ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை (5-10-1823) இராமலிங்கர் இவர்களுக்குஐந்தாவது குழந்தையாகப் பிறந்தனர். இவர் தோன்றிய ஆறுவது மாதத்தில் தந்தையார் சிவபதம் சேர்ந்தார். குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டியது மூத்தவரான ரான சபாபதிப் பிள்ளை பொறுப்பாயிற்று. சகோதர சகோதரிகளை யழைத்துக்கொண்டு சென்னைக்கு வந்து புராணச் சொற்பொழிவுகள் செய்து வாழ்க்கையை நடத்தினார். இராமலிங்கர் சென்னையில் ஐந்து முதல் இருபத்துநான்கு வயது வரை இருந்தார். தமையனாரிடத்தும், பின்னர் காஞ்சிபுரம் சபாபதி முதலியாரிடத்தும் இராமலிங்கர் கல்வி பயின்றார். இளமையிலேயே தெய்வபக்தி, ஆலய வழிபாடு முதலியவைகளில் பெரிதும் ஈடுபட்டார். தமது ஒன்பதாவது ஆண்டிலேயே கந்தர் சஷ்டி விரதமிருந்தார். அப்போது அவர் திருத்தணிகைப் பதிகம் பாடினார். அதில் ஒரு பாடல்,

"ஆறுமுகப் பெருங்கருணைக் கடலே தெய்வ
யானைமகிழ் மணிக்குன்றே அரசே முக்கண்
பேறுமுகப் பெருஞ்சுடர்க் குட்சுடரே செவ்வேல்
பிடித்தருளும் பெருந்தகையே பிரம ஞானம்
விறுமுகப் பெருங்குணத்தோர் இதயத் தோங்கும்
விளக்கமே ஆனந்த வெள்ளமே முன்
தேறுமுகம் பெரியஅருட் குருவா யென்னைச்
சிறுகாலை ஆட்கொண்ட தேவ தேவே"

அவர் சென்னையில் வசித்தபோது திருவொற்றியூர்த் தியாகேசர் கோயிலுக்கும், சென்னை கந்த கோட்டத்திற்கும் அடிக்கடி போய் வழிபட்டு வருவார். அவர், எழுத்தறி பெருமான் மாலையில்

'சிந்தை மயங்கித் தியங்குகின்ற நாயேனை
முந்தைவினை தொலைத்துன் மொய்கழற்
காளாக்காதே
நிந்தையுறு நோயால் நிகழவைத்தல் நீதியதோ
எந்தைநீ ஒற்றி எழுத்தறியும் பெருமானே'

என்று திருவொற்றியீசரைப் பாடியுள்ளார். சென்னை கந்தகோட்டத்தைப் பற்றி அவர் பாடியுள்ள பாடல்கள் மிகப் பிரபலமானவை. அவற்றில் ஒன்றாகிய "ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற உத்தமர் தம் உறவு வேண்டும்" என்று தொடங்கும் பாடலைத் தமிழ்நாட்டில் அறியாதார் இல்லை.

இவருக்கு மணவினை கொள்ளும் மனமில்லை. தமையனார் வற்புறுத்தலுக்கு இணங்கி, தமக்கை மகளை மணம் புரிந்தார். ஆனால் மனைவியுடன் ஒரு தொடர்

பும் கொள்ளவில்லை. பின்னர் இவர் குடும்பத்திலிருந்தும் வாழவில்லையெனத் தெரிகிறது.

இவர் இருபத்துநான்கு வயதுக்குப் பின் சென்னையைவிட்டு தில்லை, மதுரை முதலிய திருப்பதிகளுக்குச் சென்று பாடல்கள் பாடி, கருங்குழிக்குப் போய்ப் பதினாறு ஆண்டுகள் தங்கியிருந்தனர். சிதம்பரத்தில் கோடக நல்லூர் சுந்தர சுவாமிகளோடு அளவளாவினர். கடைசியாக சிதம்பரத்திற் கருகேயுள்ள பார்வதிபுரம் என்ற வடலூரில் வந்து தங்கினர். அங்கே தமது 45-வது வயதில் சத்திய தருமச்சாலை, சத்திய ஞானசபை இவைகளை அமைத்தார். ஞானசபை அட்ட கோணமாகத் தாமரைப் பூப்போன்றது; எட்டுமாதங்களில் கட்டி முடிக்கப்பெற்றது. இவர் இங்குறையும்போது மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையும், திருப்புகழ்ச் சுவாமி என்னும் குமரகுரு தாச அடிகளும் வந்து இவருடன் அளவளாவிச் சென்றனர் என்பர். அடிகளார் பல் வேறிடங்களில் பற்பல சமயங்களில் பற்பல அற்புதங்கள் நிகழ்த்திப் பெருஞ் சித்தராய் விளங்கினர்கள். வடலூருக்கு இரண்டுகல் தொலைவிலுள்ள மேட்டுக் குப்பம் என்னும் ஊரில் சித்திவிளாகம் என்னும் குடிசையில் தங்கியிருந்தனர். அங்கு, ஸ்ரீமுக ஆண்டு தைத்திங்கள் புனர்பூச ஓரையில் தமது திருவுருக் கரந்தார்.

அடிகளாரின் மாணவர்கள் தொழுவூர் வேலாயுத முதலியார், சென்னை கேசவ உபாத்தியாயர், நரசிங்கபுரம் வீராசாமி முதலியார், பொன்னேரி சுந்தரம் பிள்ளை முதலியோர். அவர் பாடிய பாடல்களின் மொத்தத் தொகை 6214. இவைகளை ஆறுதிருமுறைகளாக வகுத்து 'திருவருட்பா' என்ற பேர் கொடுத்தனர். திரு. ஆ. பாலகிருஷ்ணப் பிள்ளை பி. ஏ. எம். எல் அவர்கள் அரும்பாடுபட்டு வசனப்பகுதி, கீர்த்தனைப் பகுதி, திருமுகப்பகுதி முதலாகப் பல பகுதிகளாக அடிகளாரின் பாடல்களைப் பதிப்பித்திருக்கின்றனர். அடிகளாரின், மனுமுறை கண்ட வாசகம், சீவகாருணிய ஒழுக்கம், சன்மார்க்க விண்ணப்பங்கள், தமிழ் உண்மைநெறி முதலியவை உரைநடை நூல்கள். அவர்களை உரைநடைத் தந்தையில் ஒருவர் என்று சொல்லலாம். அவர்கள் பல வகைப் பாடல்களைப் பாடியிருக்கின்றார்கள். பொருள் நயமும், மனமுருகும் தன்மையுடையவை அவை. நான்கு சமயாச்சாரியர்களிடத்தும் பெரிதும் ஈடுபாடுடையவர்.

'வான்கலந்த மாணிக்கவாசகநின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ் சுவைகலந்து
ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே'

என்ற பாடல் சுவைத்தின்புறத் தக்கது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தலைசிறந்த புலவராகவும், பெரிய சமரச சன்மார்க்க ஞானியாகவும் திகழ்ந்தார் இராமலிங்க அடிகளார். அவர் மேட்டுக்குப்பத்தில் ஏற்றிவைத்த சத்திய ஞானதீபம் இன்றும் எரிந்து கொண்டிருக்கிறது. உத்தரஞான சிதம்பரம் என்ற வடலூர் ஞானசபையில் ஆண்டுதோறும் தைப்பூச நன்னாளில் ஜோதி தரிசனம் நடைபெற்று வருகிறது. வெகு அண்மையில் இவ்வாண்டு (24-1-1959) தைப்பூசத்தில் ஜோதி தரிசனத்தை வடலூரில் பல்லாயிரக் கணக்கான மக்கள் கண்டு பேரானந்தம் அடைந்தனர்.

வடலூர் அருட்பிரகாச வள்ளலார்
திருவடி வாழ்க!

# மார்ஷல் டிட்டோவின் தலயாத்திரை

யுகோஸ்லாவிய நாட்டின் தலைவர் மார்ஷல் டிட்டோவும், அவர் மனைவியாரும் மகாபலிபுரம், மதுரை, திருவரங்கம், முதலிய ஊர்களைச் சுற்றிப்பார்த்தனர். அவர்கள் **13-1-59**-ல் மகாபலிபுரம் சென்று அங்குள்ள அற்புத கற்சிற்பங்களின் அழகையும், பல்லவ மன்னர்கள் எழுப்பிய கல் தேர்களின் எழிலையும் கண்டு மகிழ்ந்தார்கள். கனம் அமைச்சர் திரு. எம். பக்தவத்சலம் அவர்களும் உடனிருந்தார்கள்.

**18-1-59**-ல் மார்ஷல் டிட்டோ தம்பதிகள் மதுரைக்குச் சென்றார்கள். முதலில் வண்டியூர் மாரியம்மன் தெப்பக் குளத்தையும் பின்னர் திருமலை நாயக்கர் மகாலையும் பார்வையிட்டனர். கடைசியாக மீனாட்சியம்மன் ஆலயத்துக்கு விஜயம் செய்தனர். பாதரட்சையைக் கழற்றிவிட்டு கோயிலுக்குள் சென்றனர். தர்மகர்த்தக் குழுவினரும் ஆணையாளரும் அவர்களை வரவேற்றனர். மீனாட்சியம்மன் கோயில் சந்நிதியிலுள்ள அஷ்ட சக்தி மண்டபத்தைப் பார்த்துவிட்டு, முதலியார் மண்டபத்திலுள்ள பிட்சாண்டார், மோகினி, முனிவர்கள் முதலியவர்களின் உருவச்சிலைகளையும் பார்த்தார்கள். பொற்றாமரையின் வடகிழக்குக்கோடியில் நின்றுகொண்டு சுமார் 160 அடி உயரமுள்ள கோபுரத்தைக் கண்டார்கள். அத்திருக்குளத்தின் மேல்கரையிலிருந்து சுவாமி, அம்பிகை இவர்களின் கற்பக் கிரகத் தங்க விமானக் காட்சியை நோக்கினார்கள். பொற்றாமரையைச் சுற்றியுள்ள சுவர்களில் தீட்டப்பெற்றிருக்கும் 64 திருவிளையாடல் வண்ண ஓவியங்களையும், திருப்பனந்தாள் காசி மடத்ததிபர்களின் அருட் கொடையால் வெண் கற்களில் பொறிக்கப் பெற்றுள்ள திருக்குறள் பாடல்களையும் பார்த்துக் களித்தார்கள். கிளி மண்டபத்திலுள்ள பஞ்சபாண்டவர் உருவங்களையும், மேற்சுவரிலுள்ள சித்திரங்களையும், சுதை வேலைகளையும் பார்த்துவிட்டு அங்கிருந்தபடியே மீனாட்சியம்மையை நோக்கிக் கழிபேருவகை கொண்டார்கள்.

பின்னர், சுந்தரேசர் கோயிலில் முக்குறுணிப் பிள்ளையாரின் காட்சி கிடைத்தது. துவாரபாலகருக்கு அண்மையில் சிறுகோயிலில் இலிங்கம், பார்வதி இத்திருவுருவங்களுக்கு நாகாபரணம், கவசம் சாத்தப் பெற்றதைக் கண்டானந்தித்தார்கள். ஒற்றைக் கல்லில் செய்யப்பெற்ற துவாரபாலகர்களின் கம்பீரத் தோற்றத்தில் அவர்களின் நாட்டம் சென்றது. நந்தி மண்டபத்தைச் சுற்றியிருக்கும் பெருந்தூண்களிலுள்ள சிற்பச் செல்வங்களைக் கண்டின்புற்றார்கள். முக்கியமாக, திருமால் மீனாட்சியம்மையைத் தாரைவார்த்து சுந்தரேசர்க்கு அளிக்கும் திருமணக்கோலக் காட்சி உருவங்களில் அவர்கள் மனம் மிகவும் ஈடுபட்டது. பிறகு அவர்களின் உள்ளத்தைக் கொள்ளைகொண்டவை வீரபத்திரர், காளி, ஊர்த்துவ தாண்டவமூர்த்தி இவர்களின் பொற்புடைய சிற்பச்சிலைகள். ஆயிரக்கால் மண்டபத்திலுள்ள நடராஜர், சிவகாமசுந்தரி, புருஷாமிருகம், குறத்தி, வேடன், வேடுவச்சி, தளவாய் அரியநாதமுதலியார் முதலியோர் உருவச்சிலைகளைப் பார்த்துவிட்டு, திருக்கலியாண மண்டபம் சென்றார்கள். தங்கம் வெள்ளித் தகடுகளால் செய்யப்பெற்ற யானை, குதிரை, காமதேனு, கற்பகதரு, கைலாச பர்வதம், மயில், கிளி, அன்னம், சிங்கம், பூதம், அதிகார நந்தி முதலிய வாகனங்களைப் பார்வையிட்டார்கள். தைப் பூச விழாவையொட்டி எழுந்தருளப்பெற்றிருந்த உத்ஸவ மூர்த்திகளான உமாமகேசர், மீனாட்சி, நடராஜர், சிவகாமி இவர்களின் அலங்காரங்கள் அவர்கள் மனத்தைக் கவர்ந்தன.

வரலாற்றுப் பழமையுடைய திருவாபரணங்கள் அவர்களுக்குக் காட்டப்பெற்

பெற்றன. விக்டோரியா அரசியார் பார்ப்பதற்காக இங்கிலாந்துக்கு எடுத்துச் சென்று ஆறுமாதம் வைத்திருந்தபின் அனுப்பப்பட்ட முத்துவிதானம் (Pearl Canopy), நீலமேகப் பதக்கம், ரூஸ்பீட்டர் என்ற மதுரைக் கலெக்டர் ஒருவர் செய்து கொடுத்த தங்கஅங்கவடி (Gold Stirrups), களன், பாண்டிய, நாயக்க மன்னர்கள் இவர்கள் அளித்த விலை உயர்ந்த நகைகள், முத்து, நவரத்ன கிரீடங்கள், கிழக்கு இந்தியக் கம்பெனிக் காசுகளாலும், ரோமன் நாணயங்களாலும் செய்த காசுமாலைகள், நற்பவளக்கொடி இவை முதலியன கண்டு அவர்கள் இன்பத்துள் ஆழ்ந்தார்கள். மார்ஷல் டிட்டோ தம்பதிகளுக்கு மீனாட்சியம்மையின் திருவுருவப்படங்கள் இரண்டு அளிக்கப்பெற்றன. இருவருக்கும் குங்குமம் அளித்துப் பரிவட்டம் கட்டப்பட்டது. அவர்கள் ஆயிரம் ரூபாய் கோயிலுக்கு நன்கொடையளித்தார்கள்.

அன்றுமாலை அவர்கள் ஸ்ரீரங்கம் சென்றார்கள். அங்கே நான்முக மண்டபவாசலில் வரவேற்கப் பெற்றார்கள். அரங்க விலாச மண்டபத்தில் வைக்கப்பெற்றிருந்த வாகனங்கள், விலையுயர்ந்த நகைகள் இவைகளைப் பார்வையிட்டார்கள். முக்கியமான நகைகள்: 15 அடிக்கு 6¼ அடியுள்ள முத்தங்கி, நவரத்ன அங்கி, ரோம நாணயங்களால் செய்யப்பட்ட காசுமாலைகள், தங்கக் குடங்கள், நவரத்ன கற்களால் செய்யப்பட்ட மூலவர், உத்ஸவர் உருவங்கள், பெரிய பச்சைக்கல் ஒன்றில் செய்த இலட்சுமி உருவம், ஏழாவது எட்வர்டு மன்னர் விஜயத்தின் நினைவுக் குறியாக 1875-ல் செய்யப்பட்ட தங்கத்தகடு. வாகனங்கள்—கருடன், ஆஞ்சநேயர், ஆதிசேஷன், பிரபை, யானை, யாளி, குதிரை முதலியன. தந்தத்தால் செய்யப்பெற்ற கத்தி, கேடயம் முதலிய ஆயுதங்களும் அவர்களுக்குக் காட்டப்பெற்றன. அப்போது நடந்துகொண்டிருக்கும் விழாவையொட்டி யாளிவாகனத்தில் எழுந்தருளப்பெற்றிருந்த உத்ஸவமூர்த்தியையும் கண்டு களித்தார்கள். இங்கும் அவர்களுக்குக் குங்குமம் வழங்கி, பரிவட்டம் கட்டப்பெற்றது. மார்ஷல் டிட்டோவிற்கு அரங்கநாதர் படமும், அவர் மனைவியாருக்கு ஆண்டாள் படமும் கொடுக்கப்பட்டது. அவர்கள் கோயிலுக்கு ஆயிரம் ரூபாய் நன்கொடையளித்தார்கள்.

வருகிற வழியில், திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டையும், உச்சிப்பிள்ளையார் கோயிலும் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்ததைப் பார்த்து மகிழ்ந்தார்கள். மதுரை ஸ்ரீரங்கம் இவ்விரண்டு ஆலயங்களுக்கும் மார்ஷல் டிட்டோ தம்பதிகளுடன் அமைச்சர் கனம் திரு எம். பக்தவத்சலம் அவர்களும், அறநிலையத்துறை ஆணையாளர் திரு. A. உத்தண்டராமன் I. A. S. அவர்களும் உடன் சென்றனர்.

---

## சந்தாதாரர்களுக்கு,

'திருக்கோயில்' அலுவலகத்திற்கு கடிதம் எழுதுபவர்கள் சந்தா எண்ணையும் தவறாமல் குறிப்பிட வேண்டும்.

ஒவ்வொரு ஆங்கில மாதமும் 3, 4 தேதிகளில் 'திருக்கோயில்' இதழ் கிடைக்கவில்லையாயின் சம்பந்தப்பட்ட அஞ்சல் நிலையத்தில் விசாரிப்பதுடன், எங்கள் அலுவலகத்திற்கும் கடிதம் மூலம் தெரிவிக்க வேண்டியது.

ஆசிரியர்.

# சிவ விஷ்ணுத்தல அட்டவணை

## சிவத்தலங்கள்

| | தலம். (1) | இறைவன், இறைவி. (2) | பாடல். (3) | ரயில் நிலயம். (4) | குறிப்பு. (5) |
|---|---|---|---|---|---|
| | | | பாண்டிய நாடு | | |
| 1 | திரு ஆப்பானூர் (திரு ஆப்புடையார் கோயில்) | திருவாப்புடையார், குரவங்கமழ் குழலம்மை. | சம்பந்தர் | ... மதுரை | ... சோழாந்தக பாண்டியன் நிமித்தம் சிவபெருமான் ஓர் ஆப்பினிடத்தில் தோன்றியருளிய தலம். |
| 2 | திரு ஆலவாய் (மதுரை) | சொக்கநாதர், மீனாட்சியம்மை. | சம்பந்தர், அப்பர் | ... மதுரை | ... சோமசுந்தரக் கடவுள் 64 திருவிளையாடல்கள் செய்தருளிய தலம். மூர்த்தி நாயனார் அரசாட்சி செய்த க்ஷேத்திரம். குலச்சிறை நாயனாராலும், மங்கையர்க்கரசியாராலும் அழைக்கப்பெற்று சம்பந்தர் கூன் பாண்டியனுடைய சுர நோயைத் திருநீற்றுப் பதிகம் பாடி குணப்படுத்தி அரசனை சைவ சமயத்தில் கொண்டுவந்தார். பஞ்ச சபைகளில் இது ரஜத சபை (வெள்ளியம்பலம்). நின்ற சீர் நெடுமாற நாயனாருடைய தலம். |
| 3 | திரு ஏடகம் ... | ஏடகநாதேசுவரர், ஏலவார்குழலி. | சம்பந்தர் | ... மதுரை | ... சம்பந்தர் சமணர்களுடன் வாது செய்த பொழுது திருப்பாசுரம் எழுதிவிட்ட ஏடு வையையாற்றின் நீரை எதிர்த்துச் செல்ல நாயனார் மற்றொரு திருப்பதிகம் பாடினவுடன் அவ்வேடு இத் தலத்தில் ஒதுங்கி நின்ற காரணத்தால் இதற்கு ஏடகம் என்ற பெயர் வந்தது. |
| 4 | திருப்பரங்குன்றம். | பரங்கிரிநாதேசுவரர், ஆவுடைநாயகி. | சம்பந்தர், சுந்தரர் | ... திருப்பரங்குன்றம். | ஆறுபடை வீடுகளில் ஒன்று. தெய்வயானை அம்மையை முருகன் மணந்த தலம் இதுவே. |

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 5 திருப்பூவணம் ... | பூவணநாதர், மின்னனையாளம்மை. | சம்பந்தர், அப்பர், சுந்தரர். | திருப்புவனம் ... | பொன்னனையாள் என்னும் தாசிக்காக சுவாமி எழுந்தருளிவந்து இரசவாதஞ் செய்து கொடுத்த பொன்னைக் கொண்டு அவள் சுவாமியின் திருவுருவம் செய்து மகிழ்ந்த தலம். |
| 6 திரு ஆடானை ... | ஆடானைநாதர், அன்பாயியம்மை. | சம்பந்தர் ... | காரைக்குடி ... | நீல ரத்தினத்தால் சிவலிங்கம் செய்து சூரியன் பூசித்த தலம். வருணனுடைய புதல்வன் (வாருணி) துருவாசருக்கு மரியாதை செய்யாமையால் அவரால் ஆட்டுத் தலையும், யானையின் உடலும் அடைந்து அந்த சாபம் இத்தலத்தில் நிவாரணமாயிற்று. |
| 7 இராமேசுவரம் | இராமநாதேசுவரர், பர்வதவர்த்தினி. | சம்பந்தர், அப்பர் ... | ராமேசுவரம் ... | இராவணன் முதலியோரைக் கொன்றதால் உண்டான பிரம்மஹத்தி தோஷம் நீங்க இராமர் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து பூசித்த தலம். சேது மாதவர் சந்நிதி இருக்கிறது. |
| 8 திருக்கானப்பேர் (காளையார் கோயில்). | காளையீசுவரர், சொர்ணவல்லி, | சம்பந்தர், அப்பர் ... | சிவகங்கை ... | சுவாமி காளை வடிவங்கொண்டு சுந்தர மூர்த்திக்கும், சேரமான் பெருமாள் நாயனாருக்கும் திருச்சுழியிலிருந்து அழைத்துப்போய் தரிசனம் கொடுத்த தலம். மூன்று சந்நிதிகள் (சோமேசுவரர்—சௌந்தர நாயகி, காளீசுவரர்—சொர்ணவல்லி, சுந்தரேசுவரர் — மீனாட்சி) உண்டு. இங்கிருந்து 27 மைலில் இளையான்குடி. இளையான்குடிமாற நாயனார் அவதார தலம் என்பர். மற்றும் சிலர் திருநள்ளாற்றுக்கு மேற்கில் 2 மைலில் உள்ளது என்பர். |
| 9 திருச்சுழியல் ... | திருமேனிநாதேசுவரர், துணைமாலையம்மை. | சுந்தரர் ... | விருதுநகர் ... | பார்வதி தேவியார் தம்மை சிவபெருமான் மணம் புரியும்படி பூசித்த தலம். சதாநந்த முனிவர் பூசித்த தலம். |
| 10 திருப்புத்தூர் ... | ஸ்ரீதளிநாதர், சிவகாமியம்மை. | சம்பந்தர், அப்பர் ... | காரைக்குடி ... | இலக்குமி பூசை செய்த தலம். பைரவர் சந்நிதி விசேடம். குன்றக்குடி சுப்ரமண்ய தலம் பக்கத்தில் இருக்கிறது. |

| | (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|---|
| 11 | திருக்கொடுங்குன்றம் (பிரான் மலை). | கொடுங்கொன்றீசுவரர், குயிலமிர்தநாயகி. | சம்பந்தர் ... | காரைக்குடி ... | பாடல் உள்ள கோயில் அடிவாரத்திலிருக்கிறது. மலைமேல் உள்ள சந்நிதியில் சுவாமி கல்யாண கோலமாய் இருக்கின்றார். திருப்புகழ் பெற்ற தலம். மகோதர ரிஷி, நாகராஜன் முதலியோர் பூசித்த தலம். |
| 12 | திருக்குற்றாலம் ... | குறும்பலாசுவரர், குழல்வாய்மொழியம்மை. | சம்பந்தர் ... | தென்காசி ... | பஞ்ச சபைகளில் ஒன்றாகிய சித்திரசபை இங்கு இருக்கிறது. இலஞ்சி குமரரும், திருமலை குமரஸ்வாமி தலங்களும் அருகில் இருக்கின்றன. |
| 13 | திருநெல்வேலி ... | நெல்லையப்பர், காந்திமதியம்மை. | சம்பந்தர் ... | திருநெல்வேலி ... | தாம்பிர சபை. தேவி சந்நிதி விசேடம். நெல்லை கோவிந்தர் சந்நிதி இருக்கிறது. |
| 14 | திருப்புனவாயில். | பழம்பதிநாதர், கருணைநாயகி. | சம்பந்தர், சுந்தரர் ... | அறந்தாங்கி அல்லது காரைக்குடி. | பாண்டி 14 தலமும் இங்கு இருப்பதாக ஐதீகம். மூலலிங்கமும், ஆவுடையாரும் மிகப் பெரியன. குலச்சிறை நாயனாருடைய அவதார தலமான மணமேற்குடி பக்கத்தில் இருக்கிறது. |

## கேரள நாடு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | திரு அஞ்சைக்களம் | அஞ்சைக்களத்தீசுவரர், உமையம்மை. | சுந்தரர் ... | இருஞ்சாலக்குடா. | சுந்தரமூர்த்தியும் சேரமான் பெருமாள் நாயனாரும் கைலாயத்திற்கு சென்ற தலம். கழறிற்றறிவார் நாயனாருடைய அவதார தலம். பரசுராமர் தாயைக் கொன்ற பாவம் நீங்கும் பொருட்டு பூசித்த தலம். |

## பம்பாய் நாடு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | திருக்கோகர்ணம். | மகாபலநாதர், கோகர்ணநாயகி. | சம்பந்தர், அப்பர் ... | ஹுப்ளி | இராவணன் இலங்கையில் ஸ்தாபிக்கும் பொருட்டு சிவபெருமானிடம் பெற்றுக் கொண்டு வந்த லிங்கத்தை விநாயகர் ஒரு உபாயத்தால் இங்கே பிரதிஷ்டை செய்தார். சிவலிங்கம் பசுவின் காது போல் இருப்பதால் தலத்திற்குக் கோகர்ணம் எனப் பெயர் வரலாயிற்று. சிவராத்திரி இத்தலத்தில் விசேடம். இத்தலத்தில் சேவார்த்திகளே லிங்கத்திற்கு ஆராதனை செய்யலாம். |

# விஷ்ணுத் தலங்கள்

| | ஊரின் பெயர். (1) | பிரயாண வசதி. (2) | பெருமாள்தாயார், திருநாமம். (3) | மங்களா சாஸனம் செய்த ஆழ்வார்கள். (4) | குறிப்பு. (5) |
|---|---|---|---|---|---|
| | | | **பாண்டிய நாடு** | | |
| 1 | கூடல் (மதுரை). | மதுரை ஸ்டேஷன் ... | கூடலழகர், வகுளவல்லி மரகத வல்லி, வரகுண வல்லி, மதுரை வல்லித் தாயார்கள். | பெரியாழ்வார், திருமங்கையாழ்வார். | சரித்திரப் பிரசித்தி பெற்ற இந்த க்ஷேத்திரத்தில் தான் திருப்பல்லாண்டு விளைந்தது. இந்த ஸந்நிதி விமானம் கண்டுகளிக்கத் தக்கது. |
| 2 | திருமாலிருஞ்சோலை மலை, அழகர் கோயில் என வழங்கி வருகிறது. "வ்ருஷப கிரி" என வடமொழியிற் கூறுவர். | மதுரை ஸ்டேஷன் ... | அழகர், மாலலங்காரர், சுந்தர வல்லித்தாயார். | பூதத்தாழ்வார், நம்மாழ்வார். பெரியாழ்வார், ஆண்டாள், திருமங்கையாழ்வார். | பரிபாடல், சிலப்பதிகாரம் முதலிய நூல்களில் பாராட்டப்பெற்ற பண்டைய ஸ்தலம் இது. இவ் வெம்பெருமானுக்குக் கள்ளழகர் எனப் பிரசித்தி உண்டு. |
| 3 | திருமோகூர் ... | மதுரை ஸ்டேஷன் ... | காளமேகப் பெருமாள், மேகவல்லி நாச்சியார், மோகூர்வல்லி நாச்சியார். | நம்மாழ்வார், திருமங்கையாழ்வார். | பெருமாள் பெயர் ஆழ்வார குறித்தது. |
| 4 | திருக்கோஷ்டியூர். | திருச்சி—மானாமதுரை லைனில் காரைக்குடி ஸ்டேஷன் | சௌமிய நாராயணன், திருமாமகள் நாச்சியார். | பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசை யாழ்வார், பெரியாழ்வார், திருமங்கை யாழ்வார். | செல்வநம்பி என்னும் இவ்வூரினர் பெரியாழ்வாரால் பெரிதும் போற்றப்படுகின்ருர். திருக்கோஷ்டியூர் நம்பி அவதார ஸ்தலம். ஸ்ரீ ராமானுஜர் மந்திரத்தை வெளியிட்டது இங்கேதான். இவ்வூர் விமானம் சேவிக்கத் தக்கது. |
| 5 | திருத்தண்கால் ... | விருதுநகர்—தென்காசி கார்ட் லைன், சிவகாசி ஸ்டேஷன். | தண்காலப்பன், அன்ன நாயகி, அநந்தநாயகி. அம்ருதநாயகி, ஜாம்பவதி, தாய்மார் நால்வர். | பூதத்தாழ்வார், திருமங்கையாழ்வார், | கருடன் இங்கு அம்ருத கலசத்துடன் விளங்குகிருர். |

| | (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|---|
| 6 | திருப்புல்லாணி. வட மொழியில் "புல்லாரண்ய க்ஷேத்ரம்" என்றும் "தர்ப்ப சயநம்" என்றும் கூறப்படும். | மானாமதுரை—தனுஷ்கோடி லைன், இராமநாதபுரம் ஸ்டேஷன். | தெய்வச் சிலையான் தெய்வச்சிலை நாச்சியார், கல்யாண ஜகந்நாதன், கல்யாணவல்லித் தாயார், தர்ப்ப சயநப்பெருமாள். | திருமங்கையாழ்வார். | புராணப் பிரசித்தமான ஸ்தலம் இது. இலங்கை செல்ல இராமன் ஸேது கட்டியது இங்கேதான். ஸேதுவைக் கண்ட மாத்திரத்திலேயே பாபம் அனைத்தும் தொலையும் என நம்பப்படுகிறது. |
| 7 | ஸ்ரீவில்லிபுத்தூர். | விருதுநகர் — தென்காசி கார்ட்லைன், ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்டேஷன். | வடபத்ரஸாயீ, அரங்க மன்னார், ஆண்டாள். | பெரியாழ்வார், ஆண்டாள். | பெரியாழ்வார், ஆண்டாள் திரு அவதார ஸ்தலம். |
| 8 | குருகூர்-" ஆழ்வார் திருநகரி" என்பது தற்கால வழக்கு. | திருநெல்வேலி—திருச்செந்தூர் லைன், ஆழ்வார் திருநகரி ஸ்டேஷன். | ஆதிப்பிரான், "ஆதிநாதன்" என வடமொழிப் பெயர். பொலிந்து நின்ற பிரான், ஆதிநாயகித் தாயார், குருகை வல்லித் தாயார். | நம்மாழ்வார், மதுரகவியாழ்வார். | நம்மாழ்வார், இராமாநுஜரது பவிஷ்யதாசார்ய விக்ரகம். மணவாள மாமுனிகள் அவதார ஸ்தலம். இவ்வூர்ப் புளியமரம் தொன்மையும் சிறப்பும் வாய்ந்தது; பழுக்காதது. அதன் அடியில் நம்வாழ்வார் கோயில் கொண்டெழுந் தருளியிருக்கிறார். பெருமாள் திருநாமங்கள் ஆழ்வார் குறித்தவை. |
| 9 | குளந்தை—பெருங்குளம் என வழங்கும். | திருநெல்வேலி—திருச்செந்தூர் லைன், ஸ்ரீவைகுண்டம் ஸ்டேஷன். | மாயக் கூத்தன், சோர நாட்யன் (வடமொழி). குழந்தை வல்லித்தாயார். | நம்மாழ்வார் ... | ஆழ்வார் குறித்த திருநாமம். |
| 10 | சிரீவரமங்கை, வான மாமலை எனவும், நான்குநேரி எனவும் வழங்கப் பெறுகிறது. வடமொழியில் "தோதாத்ரி" எனப்பெறும். | திருநெல்வேலி ஜங்க்ஷனி லிருந்து பஸ் வசதி உண்டு. | வானமாமலைப் பெருமாள். தோதாத்ரி நாதன். தெய்வநாயகன், சிரீவர் மங்கைத் தாயார். | நம்மாழ்வார் ... | இது ஸ்வயம்வ்யக்த க்ஷேத்ரம். இங்கே எண்ணெய்க் கிணறு ஒன்று உள்ளது. அவ்வெண்ணெய் எல்லா நோய்களையும் தீர்க்கும் என நம்பப்படுகின்றது. |

| | (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|---|
| 11 | திருக்குறுங்குடி ... | திருநெல்வேலி ஜங்க்ஷனி லிருந்து பஸ் வசதி உண்டு. | வைஷ்ணவ நம்பி, மலை மேல் நம்பி, நின்ற நம்பி, இருந்த நம்பி, கிடந்த நம்பி, திருப் பாற்கடல் நம்பி, குறுங்குடி வல்லித் தாயார். | திருமழிசையாழ் வாழ்வார். நம் மாழ்வார், பெரி யாழ்வார், திரு மங்கையாழ்வார். | திருமங்கை யாழ்வார் முக்தி பெற்ற ஸ்தலம். நம்மாழ்வார் இவ்வெம்பெரு மான் அருளால் அவதரித்ததாகக் கூறப் படுகிறது. இராமாநுஜரிடம் உபதேசம் பெற்று வைஷ்ணவ நம்பி ஆயினன். இவ்வெம்பெருமான் கைசிகம் பாடின நம்பாடுவான் ஐதிஹ்யம் இங்குதான் நடந்தது. இவ்வூர்க் கோயிலுக்குள் சிவன் கோயிலும் உள்ளது. |
| 12 | திருக்கோளூர் பிசுன க்ஷேத்ரம் என வடமொழி யிற் கூறுவர். | திருநெல்வேலி -திருச்செந் தூர் லைன், ஆழ்வார் திரு நகரி ஸ்டேஷன். | வைத்தமாநிதிப் பெரு மாள் (வடமொழியில் நிக்ஷேபவித்தன்) கோளூர்வல்லித் தாயார். | நம்மாழ்வார் ... | மதுரகவி யாழ்வார் திரு அவதார ஸ்தலம் |
| 13 | திருப்புளிங்குடி ... | ஷை லைன், ஸ்ரீவைகுண் டம் ஸ்டேஷன். | காய்சின வேந்தன், மலர்மகள் நாச்சியார், புளிங்குடிவல்லி. | நம்மாழ்வார் ... | பெருமாள், தாயார் திருநாமங்கள் ஆழ் வார் குறித்தவை. "காய்சின வேந்து" என்பதைச் சிலர் "காசினி வேந்து" எனக் கொண்டு அதற்கேற்ற வட மொழிப் பெயர் "பூமிபாலர்" என்பது என மயங்குகின்றனர். "பூமிபாலர்" என்பது "வேந்து" என்பதன் மொழி பெயர்ப்பு மாத்திரமே என உணர்க. |
| 14 | திருப்பேரை-தென் திருப்பேரை என வழங்கும். | ஷை லைன், ஆழ்வார் திரு நகரி ஸ்டேஷன். | மகர நெடுங்குழைக் காதர், நிகரில் முகில் வண்ணன், குழைக் காது நாச்சியார், திருப் பேரைநாச்சியார். | நம்மாழ்வார் ... | "திருப்பேரெயில்" என்பதே இதன் பெயர் என்பர். |
| 15 | தொலைவில்லி மங் கலம். | ஷை | தேவபிரான், அரவிந்த லோசநன், கருந்தடங் கண்ணித்தாயார். | நம்மாழ்வார் ... | தேவபிரான் ஸந்நிதி வேறாகவும், அரவிந்த லோசநன் ஸந்நிதி வேறாகவும், தனித் திருத்தலின் இது இரட்டைத் திருப்பதி எனப் படுகிறது. |
| 16 | வரகுண மங்கை. | ஷை லைன், ஸ்ரீ வைகுண் டம் ஸ்டேஷன். | விஜயாஸநன் வரகுண வல்லித்தாயார். | நம்மாழ்வார் ... | ...... |

| | (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|---|
| 17 | வைகுந்தம் — ஸ்ரீ வைகுண்டம் எனப்படுகிறது. | ஸ்ரீவைகுண்டம் ... | கள்ளப்பிரான், வைகுந்த நாதன், வைகுந்த வல்லி. | நம்மாழ்வார் ... | ...... |

## கேரள நாடு

| | (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|---|
| 18 | திருச்செங்குன்றூரில் திருச்சிற்றாறு. | செங்கோட்டை — திருவனந்தபுரம் லைனில் கொட்டாரக்கரை ஸ்டேஷன். | இமையவரப்பன், செங்கமல வல்லித் தாயார். | நம்மாழ்வார் ... | இமையவரப்பன் என்பது ஆழ்வார் குறித்த திருநாமம். |
| 19 | திருக்கடித்தானம். | செங்கோட்டை — திருவனந்தபுரம் லைனில் கொட்டாரக்கரை ஸ்டேஷன். | அற்புதநாராயணன், கற்பகவல்லி. | நம்மாழ்வார் ... | ...... |
| 20 | திருப்புலியூர் | ,, | மாயப் பிரான், பொற்கொடி நாச்சியார். | நம்மாழ்வார், திருமங்கையாழ்வார். | ...... |
| 21 | திருவண்வண்டூர், திருவமுண்டூர் என்பது வழங்கும் பெயர். | ,, | பாம்பணையப்பன், கமலவல்லித்தாயார் | நம்மாழ்வார் ... | ...... |
| 22 | திருவல்லவாழ், "திவல்லா" என வழங்கும். | ,, | கோலப்பிரான், செல்வத். திருக் கொழுந்து நாச்சியார். | நம்மாழ்வார், திருமங்கையாழ்வார். | அநிருத்தன், ப்ரத்யும்நன், பலராமன், ஸாத்யகி இவர்களோடும், பரதன் முதலியவர்களோடும், முறையே பார்த்தஸாரதியும், சக்கரவர்த்தித் திருமகனும் குடும்ப சமேதராய் இத்தலத்தில் ஸேவை ஸாதிக்கின்றனர். தேவப் பெருமாள் கருட வாகனத்தில் என்றும் ஸேவை தருகின்றார். |
| 23 | திருவண்பரிசாரம், திருப்பதி சாரம் எனப்படுகிறது. | திருநெல்வேலியிலிருந்து பஸ் வசதி உண்டு. நாகர் கோயிலிலிருந்து 2 மைல். | திருவாழ் மார்பன், கமலவல்லித்தாயார். | நம்மாழ்வார் ... | நம்மாழ்வார் தாயார் பிறந்த தலம், பெருமாள் திருநாமம் ஆழ்வார் குறித்தது. |

| | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 24 திருவனந்தபுரம் அநந்த சயனம் | திருவனந்தபுரம் சென்ட்ரல். | அநந்தபத்மநாபன், ஸ்ரீஹரி லக்ஷ்மி. | நம்மாழ்வார் ... | கேரள ராஜ்ஜியத்தின் தலைநகரம் இது. |
| 25 திருவாட்டாறு ... | திருநெல்வேலியிலிருந்து ஸ்வசதி உண்டு. நாகர்காயிலிலிருந்து 16 மைல். | ஆதிகேசவப்பெருமாள், மரகதவல்லி நாச்சியார். | நம்மாழ்வார் ... | ...... |
| 26 திருவாறன்விளை, ''ஆறம் முளை'' என்பது தற்கால வழக்கு. | கொட்டாரக்கரை ஸ்டேஷன். | திருக்குறளப்பன், பத்மாஸன நாச்சியார். | நம்மாழ்வார் ... | எம்பெருமாள் திருநாமம் ஆழ்வார் குறித்தது. |
| 27 திருகாட்கரை ... | ஷோரனூர் - எர்ணாகுளம் லைன், இடப்பள்ளி ஸ்டேஷன். | காட்கரையப்பன், பெருஞ்செல்வநாயகி. | நம்மாழ்வார் ... | பெருமாள் திருநாமம் ஆழ்வார் குறித்தது |
| 28 திருமூழிக்களம் ... | ஷோரனூர் - எர்ணாகுளம் லைன், அங்கமாலி ஸ்டேஷன் | அப்பன், மதுரவேணி நாச்சியார். | நம்மாழ்வார், திருமங்கையாழ்வார். | ...... |
| 29 திருநாவாய் ... | கள்ளிக்கோட்டை லைன், எடகுளம் ஸ்டேஷன். | நாராயணன், மலர்மங்கைத்தாயார். | நம்மாழ்வார், திருமங்கையாழ்வார். | ...... |
| 30 வித்துவக்கோடு ... | ஷோரனூர்-எர்ணாகுளம் லைன், பட்டாம்பி ஸ்டேஷன். | உய்யவந்தபெருமாள், வித்துவக்கோட்டு வல்லி. | குலசேகராழ்வார். | ...... |